# தேவ கானம்

(126, இனிய தமிழ்க் கீர்த்தனங்கள்)

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

# தேவ கானம்

(126 இனிய தமிழ்க் கீர்த்தனங்கள்)

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்

அன்பு நிலயம்

இராமச்சந்திரபுரம் :: திருச்சி ஜில்லா

THE MADURA TAMIL SA

பதிப்புரிமை :

முதற் பதிப்பு : 1943

இரண்டாம் பதிப்பு : 1945

விலை ரூ. 1—4—0

கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், ஜி. டி., சென்னை.

# பதிப்புரை

தேவகானத்தின் இரண்டாம் பதிப்பை, தில்லைக் கூத்தன் திருவடியில்வைத்து வணங்குகிறோம். இதில் 126 இனிய தமிழ்க் கீர்த்தனங்கள் அடங்கியுள்ளன; அத்தனையும் அருளாவேசம் பெற்ற புதிய பாடல்கள்; வேதாந்த சித்தாந்தப் பொருளடங்கி மனித சமுதாயத்திற்கு வழி காட்டும் இன்னிசை உபதேசங்கள்.

இன்று தமிழ்நாடு இக்கீர்த்தனங்களின் பெருமையைக் கொண்டாடுகின்றது; பல கச்சேரிகளிலும், ரேடியோவிலும், கிராமபோனிலும் இப்பாடல்கள் முழங்குகின்றன. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார், இப்பாடல்களில் சிலவற்றைத் தேர்ந்து ஸ்வரத்துடன் அச்சிட்டிருக்கிறார்கள். எஞ்சிய பாடல்கள் உரிய காலத்தில் ஸ்வரத்துடன் வெளிவரும்.

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் கீர்த்தனங்களில் மோகங்கொண்டு, அவற்றைத் தமிழகமெங்கும் பாடிப் பரப்பி வரும் இசைமணிகளுக் கெல்லாம் எமது நன்றியாகுக. ஓம் திருச்சிற்றம்பலம்!

இராமச்சந்திரபுரம்,
21—3—1945

அன்பு நிலயத்தார்.

கா கா - உ - தி

# தேவ கானம்

## 1. ஆண்டவா உனதடிமலர்

இராகம் : காம்போதி] [பண் : தக்கேசி

ஆண்ட வாவுன தடிமலர்த் தேனை
அள்ளி அள்ளியான் பருகிட வேண்டும் !
வேண்டும் உன்னடி யார்திருக் கூட்டம் ;
வினையி னேன்பிறப் புய்ந்திட வேண்டும் !
வேண்டும் உன்னருள் வேட்கை ; யென் உள்ளம்
வேறு வேட்கைகள் ஆறிட வேண்டும் !
வேண்டும் உன்புகழ் பாடிடும் இன்பம் ;
விமல னேயென தாருயிர் வேந்தே !

அம்மை யப்பனு நண்பனு மாவாய்
அருட்பெ ருங்குரு தேவனு மாவாய்
எம்ம தத்திற்குஞ் சம்மத மாவாய்
எவ்வு யிர்க்கும் உயிர்க் கனலாவாய்
பன்மை யாம்ஒரு பான்மையும் ஆவாய்
பரம னீசக சீவனு மாவாய்
இம்மை யம்மைப் பயன்களு மாவாய்
இதய நாடக னேசுடர் வேந்தே !

## 2. பிறப்பிலே யென்னுள்

[இராகமாலிகை]

பிறப்பிலே யென்னுட் பிறந்தசிற் காந்தமே !
பெரியவுல கத்தி னியல்பைப்
பிள்ளையாம் போதிலே பேசியறி வித்தெனைப்
பிரியாக் கவிக் காந்தமே,
மறப்பிலே கண்மூடி மாயத்தில் வீழாது
மனதைக் கவர் காந்தமே,
மாசைத் துடைத்தன்பு மதியைத் துலக்குகிற
மாதவ வொளிக் காந்தமே,
இறப்பிலாப் பேரின்ப 'மிது'வென வுணர்த்தியுள்
எழுந்திரு வருட் காந்தமே,
இரவுபக லற்றவிடம் என்னோடி யாருகும்
எல்லையறும் ஏகாந்தமே,
சிறப்பிலே உள்ளமாம் பொதுவிலே உலகமாம்
சிற்றம் பலக் காந்தமே,
சித்தாந்த வேதாந்த சிரமான பரமான
திருவான சிவ காந்தமே !

MADURA TAMIL SANGAM

## 3. ஜீவ முரளியிலே

**இராகம் : கேதாரகௌளம்]** **[திரிபுடை தாளம்**

**பல்லவி**

ஜீவ முரளியிலே தேவகானம் பொழிவாய்
தேஜோமயா னந்தனே—அனந்தனே (ஜீவ)

**அநுபல்லவி**

பாவனு ரஸமுடன் பக்தி பரவசமும்,
பாடப் பாடத் தெவிட்டாப்
பண்ணமு தும்பெருக (ஜீவ)

**சரணம்**

மன்னுயிர் வாழ்வெல்லாம் இன்னிசைப் பொழிலாகி,
மங்கலக் கனிவளம் பொங்கிக் குலுங்கிடவே,
உன்னத ஞானத்தில் ‘ஓம் சுத்த சக்தி’ யென்றே
ஊறித் ததும்பி வரும் பேரின்ப வெள்ளம்போல் (ஜீவ)

## 4. மானஸ சிவ பூஜை

**இராகம் : கேதாரம்]** **[ரூபக தாளம்**

**பல்லவி**

மானஸசிவ பூஜை செய்குவோம்—சச்சி
தானந்தம் பெற (மான)

**அநுபல்லவி**

ஊனுலைய உள்ளத் துள்ள
ஞான னந்தப் பொருளுக்கே—சதா (மான)

**சரணம்**

புனிதத் தியானப் புனலி லாட்டிப்
போத சைதன்யம் சூட்டி,
தினமும் அன்பு மலர் சொரிந்து,
சித்தத்தை நிவே தித்து,
கனலும் ஆர்வத் தூபங் காட்டிக்
கருணை யுருவைப் போற்றி
மனித வாழ்க்கை முற்றிலும் சுப
மங்களஆ ரத்தியாகவே (மான)

## 5. சூட்சுமஞ்சொல் ஐயனே !

இராகம் : நாதநாமக்கிரியை] [ஆதி தாளம்

பல்லவி

சூட்சுமஞ் சொல்லையனே,
சுத்த சிவனே ! (சூட்)

அநுபல்லவி

சாட்சியா யிருந்து நீ
காட்சி யுலகை யாளும் (சூட்)

சரணம்

சுககன மோனியாய்ச் சும்மா இருந்தே நீ
அகந்தொறும் அகந்தொறும் அகமக மென்றுடும் (சூட்)

துரிய மலை முடிமேல் தூங்கி யிருந்தபடி
பரவியிவ் வுலகெல்லாம் பலவினை யாடல் செய்யும் (சூட்)

## 6. தீன தயாபரனே !

இராகம் : கேதாரம்] [ஆதி தாளம்

பல்லவி

தீன தயா பரனே—என் குறை தீர்த்த
திவ்ய க்ருபா கரனே ! (தீன)

அநுபல்லவி

மான மில்லாது வாழ்ந்த
ஈனன் எனக்கும் சிவ
ஞானம் பழுத்த தேவ
கான சுகத்தைத் தந்த (தீன)

சரணம்

புல்லேன் உன் புகழினைச்
சொல்லேன் பதி யறிவைக்
கல்லேன் கற்றவர் வழி
நில்லேன் பொல்லேன் எனக்கும்
நல்ல துணையாய் ஒரு
சொல்லைக் கொடுத்து மடத்
தொல்லை யெல்லாந் தவிர்த்த
தில்லைச் சபா பதியே (தீன)

## 7. ஏதுக்குக் கவலை ?

இராகம் : உசேனி] [சாபு தாளம்

பல்லவி

ஏதுக்குக் கவலை கொண்டாய்—பேதை மனமே
ஏனோ இப்படித் துவண்டாய் ? (ஏது)

அநுபல்லவி

சாது ரக்ஷகனை ஜகதீசன் இருக்கையில்
சஞ்சலங் கொண்டு நீ நெஞ்சழி வதுமேனோ ? (ஏது)

சரணம்

பருவ காலம் போலே இருவினைப் பயன்களும்
பக்குவ மாகப்பல துக்கசுகங்க ளாகும் ;
வருவதெல்லாம் நன்மை பெறுவதற்கே ; வினை
அறுவதற்கே ; முக்தி யுறுவதற்கே—அறிவாய் (ஏது)

## 8. நில்லாதே போ பகையே

இராகம் : கானடா] [தேசாதி தாளம்

பல்லவி

நில்லாதே போ பகையே—நின்றால் வரும்
நீலகண்டன் உதையே ! (நில்)

அநுபல்லவி

செல்லா தினியுன் சேட்டை
சீறினால் வரும் சாட்டை (நில்)

சரணம்

காட்டி விஷயசுகம் ஊட்டி மயக்குகளே,
மாட்டி பந்தவினையைப் பூட்டி மடச்சிறையில்,
நீட்டி யமபாசத்தை வாட்டிக் கெடுத்தாயென்னை (நில்)

கூடி முகமனுரை ஆடிப் பிறகுமெல்ல
ஊடிநல் லறிவினைச் சாடிப் பணம்பறிக்க
மோடி செய்தென்னைச்சூறை ஆடும் காமப் பிசாசே—நீ (நில்)

ஏகன் அநேகன்வி வேகங் கொடுத்தான்—சிவ
யோகம் புரிந்து சுத்த போகம் புசிக்கப்—பரி
பாகம் அடைந்திடவே தாகங் கொண்டேன்—என்முன் (நில்)

## 9. அன்புச் சிகாமணியே

**இராகம் : தோடி]** **[ஆதி தாளம்**

பல்லவி

அன்புச் சிகாமணியே—என்
அப்பாவுன் கருணையை
எப்போதுந் துதி செய்வேன் (அன்பு)

அநுபல்லவி

செம்பொற் சபையில் வளர்
இன்பப் பரஞ்சுடரே (அன்பு)

சரணம்

நாவார வுனைப்போற்றித் தேவாரம் பாடிய
நாயன்மார்க் கருள்செய்த நாதா, குஞ்சித பாதா, (அன்பு)

ஜீவ ஜகத் ரக்ஷகன் ஆவாய்; அடியே னுள்ளம்
பாவா லுனைப்பூசிக்க வாவா, தேவாதி தேவா ! (அன்பு)

## 10. பாதமே துணை

**இராகம் : காபி]** **[ரூபக தாளம்**

பல்லவி

பாதமே துணை—சிவ
பாதமே துணை (பாத)

அநுபல்லவி

ஆதி சக்தியின்—பரஞ்
ஜோதி நாதனின் (பாத)

சரணம்

காமம் வெகுளி கலக்க மான
கவலை நீங்கிக் கட்டு விலகி

நாம ரசத்தைப் பருகிப் பருகி
நமச்சிவாய ஓம் ஹர வென...

நயந்து நயந்து நவின்று நவின்று
பயந்தெளிய நல் லபய மளிக்கும் (பாத)

## 11. உன்பாத காணிக்கையே

இராகம் : கல்யாணி] [சாபு தாளம்

**பல்லவி**

உன்பாத காணிக்கையே—என்
உடலினில் இடங்கொண்ட நடன சிகாமணியே (உன்)

**அநுபல்லவி**

அன்பு மிகுந்த வள்ளல் அரசரும் செல்வரும்
அள்ளி அள்ளிக் கொடுக்கும்
வெள்ளி மலர்களெல்லாம் (உன்)

**சரணம்**

நிட்டையில் இருந்துன்னை நினைந்து நினைந்துருகி,
நிதமுன் பெருமையைப் பதம்பாடி மகிழ்கின்றேன் ;
கட்டிக் கரும்புதின்னக் கைக்கூலி வேண்டுமோ ?
கருணை ரசத்திற் பூத்த கான மலர்க ளெல்லாம் (உன்)

## 12. எல்லார்க்கும் பொதுவான

இராகம் : காம்போதி] [திரிபுடை தாளம்

**பல்லவி**

எல்லார்க்கும் பொதுவான நிர்க்குண ப்ரம்மத்தை
இதயத்தில் வழிபடுவோம்—ஓம் (எல்)

**அநுபல்லவி**

எல்லையில் லாவுலகம் எங்கும் உயிர்க்குயிராம்
இன்பமயச் சுடரை அன்புமலர் சொரிந்தே (எல்)

**சரணம்**

சாதி மதங்கடந்த ஸர்வாத்ம ஸமரஸம்,
சத்திய நித்திய சச்சிதா னந்தமயம்,
பேத ரகிதமான ஜோதிப் பரம்பொருளைப்
பிரியாத தியானத்தில் உருவாகப் பாவித்தே (எல்)

## 13. ஓம் சச்சிதானந்தமே

**இராகம் : பிலகரி]** **[ஆதி தாளம்**

**பல்லவி**

ஓம் சச்சி தானந்தமே—பரப்ரம்மமே
ஓம் சச்சி தானந்த ஓமே... (ஓம்)

**அநுபல்லவி**

தாமஸ ராஜஸ சத்வ குணரகித
தற்பரமே, தில்லைச் சிற்பரமே, சிவமே (ஓம்)

**சரணம்**

சாந்த சுககனசித் தாந்த சுத் தாத்வைத
சதஸத் விலாஸ மாகிச் சகல நிஷ்கள மாகி,
காந்தம் போல் உயிரினைக் கவர்ந்து கலந் திருந்தே
கண்ணைத் திறந்து தன்னைக்காட்டுங் கதிர்மணியே (ஓம்)

## 14. ஓங்கார சத்யஜோதி

**இராகம் : பியாகு]** **[ஏக தாளம்**

**பல்லவி**

ஓங் கார சத்ய ஜோதி
சுத்த ப்ரஹ்மமே நம (ஓம்)

**அநுபல்லவி**

ஓம் தத்ஸத் ஓம்என் ஸ்ருதி
வேத உண்மை ஓதும் பொருளே (ஓம்)

**சரணம்**

வானும் புவியும் கானும் மலையும்
வாழுயிர்கள் யாவிலும்,
தானே தானாய்த் தழைக்கும் சச்சி
தானந்தமய ஞானப் பொருளே (ஓம்)

## 15. பக்தி பரவசத்தால்

இராகம் : மயூரத்வனி] [ஆதி தாளம்

பல்லவி

பக்தி பரவசத்தால் பாவன மாவோம்
பரமா னந்தத்தைப் பெறுவோம் (பக்தி)

அநுபல்லவி

சுத்த முக்த நித்ய சத்ய ஸமரஸன்மேல் (பக்தி)

சரணம்

ஹரி ஹர மஹா தேவ அல்லா பரம பிதா
முருகா ஸத்குருவென்றே உருகி மனங்குவிந்த (பக்தி)

நாமரூ பங்கடந்த ஞானப் பரஞ்ஜோதியை
'ஓம்தத்ஸத் ஓம்' என்ற
உண்மை மந்திரம் ஓதி (பக்தி)

## 16. சித்தம் இரங்கி

இராகம் : கல்யாணி] [ஆதி தாளம்

பல்லவி

சித்தம் இரங்கியுன் பக்திப்ர ஸாதம் அருள்
தில்லை நட ராஜனே! (சித்த)

அநுபல்லவி

மத்தலை தயிர் போலென் மனம் அலை கின்றதே,
மாய வலைகளை மருவத் துடிக்கின்றதே! (சித்த)

சரணம்

ஐம்புலக் கணைகளைத் தடுத்தே—ஆசை
ஆணவத் திற் குதை கொடுத்தே,

நம்பும் அடி யாரை அடுத்தே—எந்
நாளும் உன் அன்பினை மடுத்தே,

நெஞ்சக் கமலத்திலுன் செஞ்சிலம் படிவைத்தே,
நிருத்தமிட் டுன்புகழைப் பொருத்தமா யிசைத்தே,

அஞ்சல் எனுங்கரத்தைக் கொஞ்சிச் சிரங்குவித்தே
அத்தாநான் காணவுன் அம்பலக் கூத்தினைச் (சித்த)

## 17. சிவ சிவ என நினை

இராகம் : ரீதிகௌளை] [ரூபக தாளம்

பல்லவி

சிவ சிவ என நினை மனமே
ஜீவன் முக்தி யனுபவமாம் (சிவ)

அநுபல்லவி

பவஹர பசுபதி கிரீச
பரம யோகி ஓம் மஹேச (சிவ)

சரணம்

கிலிகொண்டு பகை வீடும்—உன்
கேடுகளெல்லாம் வாடும்
புலியினும் கொடுங் காமம்—உன்னுட்
புகலின்றி வெந்து போமே (சிவ)
அகவிருளிடர் வாடும்—உன்னை
அருட்சுட ரொளி நாடும்
இகபரசுகம் கூடும்—பொல்லா
எமபயஞ் சொல்லா தோடும்
சங்கர சசி தர ஜடாதர
கங்காதர கௌரி மனோகர (சிவ)

## 18. புன்னகைப்பது நீயோ?

இராகம் : வசந்தா] [ஆதி தாளம்

பல்லவி

புன்னகைப்பது நீயோ ?—அந்தப்
பொருளெனக் கோ தா யோ ? (புன்ன)

அநுபல்லவி

தன்மய ஒருமையைப் பன்மையாய் விளக்கிய
தந்திரக் கோலங்கொள் இந்திர ஜாலனே (புன்ன)

சரணம்

சூரிய சந்திரரில்—வானச் சுடர்மணிப் பந்திகளில்,
நாரியர் நாணத்திலே—ஆசை நல்குகண் கோணத்திலே,
ஆரிய மின்னலிலே—பூவின் அழகான பின்னலிலே...
வட்ட வுலகெங்கும்
எட்டியெட்டிப் பார்த்து,
வாயைத் திறக்காது
மாயஞ்செய் ஈசனே (புன்ன)

## 19. ஒருவா, என் இறைவா!

**இராகம் : நடபைரவி]** **[ரூபக தாளம்**

**பல்லவி**

ஒருவா, என் இறைவா,
ஒப்புயர்வில் லாத பரமா ! (ஒரு)

**அநுபல்லவி**

திருவார் சிதம்பரத்தில்—வாழும்
தேஜோமய மான பொருளே !
அருவாய் அருவுருவாய்—ஸத்
குருவாய் வரும் கருணைக் கடலே ! (ஒரு)

**சரணம்**

சுத்தானந்த மலைமேல் ஒளிர்
தூண்டா மணிவிளக்கே...
அத்துவாவைக் கடந்த துரியா
தீதமான ஆதி சிவனே (ஒரு)

## 20. பசுபதியைத் துதி

**இராகம் : ஸரஸ்வதிமனோஹரி]** **[தேசாதி தாளம்**

**பல்லவி**

பசுபதியைத் துதி செய்குவோம்,
பசுபாசம் நீங்கிப் பரமபாவனமாம் ! (பசு)

**அநுபல்லவி**

அசையா தமர்ந்தே அருளாடல் புரியும்
அஷ்ட மூர்த்தியினை இஷ்ட சித்தி பெறப் (பசு)

**சரணம்**

தாச மார்க்கமான சரியை புரிந்து,
சத் புத் திரன்போல் அப்பனை வணங்கி,
நேசமார்க்க யோக நிலை கூடிநின்றே
நின்மல ஞானமாம் சன்மார்க்கம் பயின்றே (பசு)

## 21. சிரஞ்சீவியா யிருப்போம்

இராகம் : நாட்டைக்குறிஞ்சி] [ஆதி தாளம்

**பல்லவி**

சிரஞ்சீவியா யிருப்போம்—சீறுங் கூற்றையுஞ்
சிவமந்தி ரத்தால் ஜெயிப்போம்—மனமே (சிர)

**அநுபல்லவி**

அறம்பொருள் இன்பமும், அத்யாத்ம சித்தியும்,
அமரா னந்த சக்தியும் அடைந்து, ஜீவன் முக்தராய்ச் (சிர)

**சரணம்**

கதிரவன் சுடரினைக் கடும்புயல் அணைக்குமோ ?
கரையில்லாக் கடலினைக் கட்டுகள் பிணைக்குமோ ?
பதியுடன் பொருந்திய பரமசுத் தான்மாவை,
பாசநாச வினைகள் பற்றி வருத்திடுமோ ? (சிர)

## 22. எல்லாம் சிவமயம்

இராகம் : அடாணு] [ரூபக தாளம்

**பல்லவி**

எல்லாம் சிவமயம், எல்லாம் சிவமயம்,
எல்லாம் சிவமயமே...
எல்லாம் சக்திமயம், எல்லாம் சக்திமயம்,
எல்லாம் சக்திமயமே... (எல்)

**அநுபல்லவி**

கல்லெல்லாம் புல்லெல்லாம் காடு மலையெல்லாம்
உள்ளும் புறமுமிங் குள்ளதும் இல்லதும் (எல்)

**சரணம்**

விண்ணின் சுடரெல்லாம், மண்ணின் மலரெல்லாம்,
கண்ணுறுங் காட்சி யெல்லாம்,
எண்ணி யெண்ணியித யத்தில் ' இது 'வென்
றுணர்ந்திடும் இன்பமெல்லாம்,
புண்ணிய ஞானப் புலவர் அறிந்த
பொருளும் அருளு மெல்லாம்,
வண்ண வுருவும் அருவும் குருவுமாய்
வாசாம கோசர மாக விளங்கிடும் ! (எல்)

## 23. ஈசனே, சக்தி விலாச

இராகம் : ஹரிகாம்போதி] [தேசாதி தாளம்

பல்லவி

ஈசனே சக்திவி லாச மஹேசனே (ஈச)

அநுபல்லவி

தாசரின் நேசனே தானவர் நாசனே (ஈச)

சரணம்

அன்னையே, அப்பனே, அன்பருக் கன்பனே,
உன்னையே நம்பினேன், என்னுயிர் நாதனே (ஈச)

சூதுபொ ருமைகள் வாதுசெய் யாமலுன்
பாதுகாப் பீந்தருள் சாதுஸம் ரக்ஷகா (ஈச)

பொய்யகங் காரத்தைக் கொய்தடி வேருடன்
மெய்யுணர் வோங்கிய தெய்வஜீ வனமருள் (ஈச)

## 24. அருள் புரிவாய்

இராகம் : ஹம்ஸத்வனி] [ஆதி தாளம்

பல்லவி

அருள் புரிவாய் கருணைக் கடலே,
ஆருயிர் அனைத்தும் அமரவாழ்வு பெறவே ( அருள்

அநுபல்லவி

பரிபூர்ண சதா னந்த வாரியே,
பக்த ரக்ஷகனே பரமாத்மனே (அருள்)

சரணம்

அருணோ தயம்போல் ஆத்ம சாந்தியும்,
அறிவுண்மை யன்புத் திருவுந் தருவாய் ;
தருமப்பயிர் வாழுந் தருணமா மழையே,
தங்குல கெங்கிலும் மங்களம் பொங்கவே ! (அருள்)

## 25. நஞ்சையுண்ட கண்டனே

**இராகம் : பலஹம்ஸ]** **[ஆதி தாளம்**

**பல்லவி**

நஞ்சை யுண்ட கண்டனே—உனைத்
தஞ்சமென்று நம்பினேன் (நஞ்சை)

**அநுபல்லவி**

அஞ்சு தேவர் வாழுவே
நெஞ்சிரங்கி நீலவேலை (நஞ்சை)

**சரணம்**

என்மனக் கடலிலே எழும் விஷச் சரக்கெலாம்,
கன்மவாச னையெலாம், கருணையால் விழுங்கியே,
உன்நினை வமுதமாக ஊறிநிற்க நீயருள்,
ஓம்நமச்சி வாயவோம், ஓம்நமச்சி வாயவோம் ! (நஞ்சை)

## 26. மானிட வாழ்க்கை

**இராகம் : செஞ்சுருட்டி]** **[ரூபக தாளம்**

மானிட வாழ்க்கை யெனும்—சுப
மங்கல வீணையிலே
ஆனந்தப் பண்ணொலிப்பாய்—பரமா
அன்புரு வானவனே ! (மானிட)

கட்டற்ற காற்றினைப்போல்—மதி
கண்ட கடலினைப்போல்,
கொட்டும் அருவியைப்போல்,—ஜீவக்
குழலிற் பாட்டிசைப்பாய் ! (மானிட)

கதிர்-மதி விழியால்—என்னைக்
காணுயிர்க் காதலனே !
புதிய காலையிலே—என்னுட்
புள்ளிசை யாய் வளர்வாய் ! (மானிட)

உலகக் கோயிலிலே—இறைவா
உன்னை யலங்கரிக்கும்—பா
மலர்ப்பணி புரியும்—இன்ப
வர மெனக்கரு ளாய் ! (மானிட)

## 27. கயிலாச சிவ கௌரி

இராகம் : பூர்ணஷட்ஜமம்] [தேசாதி தாளம்

பல்லவி

கயிலாச சிவ கௌரி சங்கரா,
கங்காதரா, கருணாகரா—ஓம் (கயிலா)

அநுபல்லவி

உயிர்களை யெல்லாம் உடலாகக்கொண்டே
உலகாலயத்தில் பலவா யுலாவும் (கயிலா)

சரணம்

நாவிலுன் பெயரை நவில்வதென் மகிழ்வாம்,
பூவிலுன் புகழே பொலிவதென் புகழாம் !
ஆவியி லுன்னைநான் ஆசையாய்க் கலந்தே
பாவன மாதலென் பரமா னந்தமாம் ! (கயிலா)

## 28. ஹரஹர சிவ ஹரிஹரி

இராகம் : சுபோஷணி] [ரூபக தாளம்

பல்லவி

ஹரஹர சிவ ஹரி ஹரி யென
அரிய நாமம் ஜபிப்போம் (ஹர)

அநுபல்லவி

பரகுருவர சுர நாரண
பசுபதி சுத்த பரிபூரண (ஹர)

சரணம்

அகர உகர மகரமான அக்ஷரஸ்ருதி கூட
மகர யாழும் குழலும் குரலும்
மத்தளத்துடன் பாட...
இகபரசுகம் அருளும் சச்சித்
தின்ப மயனை
அன்பு செய்தே (ஹர)

## 29. எப்படிப் பாடினரோ !

**இராகம் : நாதநாமக்கிரியை] [தேசாதி தாளம்**

**பல்லவி**

எப்படிப் பாடினரோ—திருவடியார்
அப்படிப் பாடநான்
ஆசைகொண்டேன் சிவனே ! (எப்படி)

**அநுபல்லவி**

அப்பரும் சுந்தரரும் ஆளுடைப் பிள்ளையும்
அருள்மணி வாசகரும்
பொருளுணர்ந் துன்னையே (எப்படி)

**சரணம்**

குருமணி சங்கரரும், அருமைத் தாயுமானரும்,
அருணகிரி நாதரும், அருட்சோதி வள்ளலும்,
கருணைக்கடல் பெருகிக் காதலி னுலுருகி,
கனிதமிழ்ச் சொல்லினல்
இனிதுனை அனுதினம் (எப்படி)

## 30. மங்களநாம சங்கீர்த்தனம்

**இராகம் : தன்யாசி] [தேசாதி தாளம்**

**பல்லவி**

மங்கள நாமசங் கீர்த்தனம் செய்குவோம்
மானிடரே வாரீர் (மங்கள)

**அநுபல்லவி**

சங்கர சாம்ப சதாசிவ நாரண
சம்பு ஜனார்த்தன ஜயஹரி ஹரி யென்றே (மங்கள)

**சரணம்**

ஓம்கணபதி குக ஓம்சரவண பவ
ஓம்சக்தி வாணி கல்யாணி மஹாலக்ஷ்மி,
ஓம்சுத்த சத்குரு ஓம்சச்சி தானந்த
ஓம்பரி பூரண பரமபிதா வென்றே (மங்கள)

## 31. சச்சிதானந்த ஸ்வரூபனே

**ஸ்ரீ ராகம்]** **[ரூபக தாளம்**

**பல்லவி**

சச்சிதானந் தஸ்வ ரூபனே—சதாசிவனே (சச்சி)

**அநுபல்லவி**

இச்சா ஞான க்ரியா சக்தி ஈஸ்வரி சமேதனுக...
மூச்சகமும் படைத்துக் காத்து
முடித்துத் தோற்றும் மூலப்பொருளே (சச்சி)

**சரணம்**

சுத்த மனத்திற் சொலித்திடும் பரஞ் ஜோதி வெள்ளமே,
பக்திகொண்ட உள்ளந் தன்னிற் பாடும் வள்ளலே...
சக்தி யனலைத் தூண்டி ஆறு—சக்கரங்களைத் தாண்டி,
முத்தி நிலையாம் ஸஹஸ்ராரத்தில்
நித்திய சுத்த சுதந்தர
சத்திய சித்தி யளித்தருள் (சச்சி)

## 32. நிர்விஷயனுய்

**இராகம் : சஹானு]** **[சாபு தாளம்**

**பல்லவி**

நிர்விஷ யனுய்ச் சற்றே நிர்விகல்ப சமாதி
நிலைத்தேநான் சுகிப்பதென்றே—பரமாத்மனே (நிர்விஷ)

**அநுபல்லவி**

சர்வாந்தர் யாமியே சத்குரு சாமியே
சஹஜநிஷ்டைக்கென் உள்ளம்
விகசிக்கச் செய்தருள் (நிர்விஷ)

**சரணம்**

காமக்குரோதலோப மோகாந்த காரமாம்
காட்டைநீ தாண்டு வித்தாய்;
நாம ஜபதப தியான மோனத்தாற் சிவ
ஞானத்தைத் தூண்டு வித்தாய்...
தாமதி யாமலென் தாகந் தணித்தென்றும்
தன்மயா னந்தத்தில்
உன்மய னுகியே— (நிர்விஷ)

## 33. காலனை உதைத்தவனே

இராகம் ; தோடி] [ஆதி தாளம்

பல்லவி

காலனை உதைத் தவனே—காமனை நெற்றிக்
கண்ணினுல் எரித்தவனே—அரனே (கால)

அநுபல்லவி

மூல குண்டலி சக்தி பாலை ஸஹஸ்ராரத்தில்
முக்கனல் எழுந்திட
முயங்கும் சக்தி சிவனே (கால)

சரணம்

கனவிலும் நனவிலும் எனைப்பிடித் துவருத்தும்
கவலையை உதைத் தெறிவாய் ;
மனமாயை யாகிய மதியிலியைத் தவக்
கனலினுல் எரித்திடுவாய் ;
புனித முனிவர்க்கன்று புகன்ற சிவஞான
போதத்தை எனக் கருள்வாய்...
இனிதுசிற் சக்தியால் கனிந்து கனிந்துன்னுடன்
இரண்டறக் கலந்திடும்
வரந்தனை வேண்டினேன் (கால)

## 34. தாகந் தணித்தருள்

இராகம் : மத்யமாவதி] [தேசாதி தாளம்

பல்லவி

தாகந் தணித்தருள்வாய்—எனது மனத்
தாகந் தணித் தருள்வாய் (தாக)

அநுபல்லவி

சோக மோகங்களில்அ நேககாலம் சுற்றிச்
சோர்ந்தேன் ; உனது பதம்
சார்ந்தேன் ; எனைக்கண் பார்த்தே (தாக)

சரணம்

ஆத்ம ஞான தீரர்கள் சாத்வீக சேதனம்
பூத்துப் பருகுகின்ற பூரணனந்தத் தேனல் (தாக)

## 35. காவாய் ஜகதீசனே !

இராகம் : முகாரி] [சாபு தாளம்

பல்லவி

காவாய் ஜக தீசனே—எனைக்கண் பார்த்து,
காவாய் கயிலாசனே ! (காவாய்)

அநுபல்லவி

நாவாலே யினித்துயர் நவில முடியாது...
தேவாதி தேவா-உன்-சித்தம் இரங்கியுடன் (காவாய்)

சரணம்

இருளினில் ஏங்குகின்றேன்—வழிகாணுமல்
இன்னும்பின் வாங்குகின்றேன் ;
அருளினைக் கூவுகின்றேன்—உன்பாதத்தில்
அங்கண்ணீர் தூவுகின்றேன்.
கவலைக் கடலை விட்டுக்
கரையேற்றி, மனமான
சவலைக் குழந்தைக்குன்
சன்மார்க்கங் காட்டியே (காவாய்)

## 36. அமரானந்த வாரியே

இராகம் : நாட்டை] [ஆதி தாளம்

பல்லவி

அமரா னந்த வாரியே—சுத்த போகத்தில்
அமர்ந்த அர்த்த நாரியே (அமரா)

அநுபல்லவி

எமபயந் தீர்க்குங்கா மாரியே—என் நா முழங்கும்
என்றும் நமச்சிவாய பேரியே—ஓம் (அமரா)

சரணம்

அஞ்சல் என் றருளும்பூங் கரனே—தோன்றுத் துணையாய்
அடியாரைக் காக்கும்சங் கரனே !...
பஞ்சகோ சா தீதனே—ஆணும் பெண்ணுமாய்
பாரினில் ஆடும் பூத நாதனே ! (அமரா)

பொங்கும் தனுகரண புவன போகத்தைத் தந்தே
வெங்குல மலவினை மங்க உபாயஞ் செய்தே
எங்களை மேலேற்றி இனிய திருவருளால்
மங்கல வாழ்வுதருங் கங்காதரனே சரண் (அமரா)

## 37. அந்தரங்க மெல்லாம்

இராகம் : கௌளிபந்து] [ஆதி தாளம்

பல்லவி

அந்தரங்கமெல்லாம் அறியாயோ ?—இன்னும்
வந்தெனக் குறுதுணை புரியாயோ ?-சிவனே என் (அந்த)

அநுபல்லவி

தந்திமி தோமெனத் தண்டை சலசலக்கத்
தாண்டவம் ஆடிடும் ஆண்டவனே நீ யென் (அந்த)

சரணம்

ஓயாத கவலையை ஓட்டி—அருள்
ஒளியினை யென்கண்முன் காட்டி,
வாயாடும் வாசலைப் பூட்டி—மௌன
மந்திரத் தியானத்திற் கூட்டி...
தூயநல் லறிவினைத் தூண்டியென் னுள்ளத்தில்
துள்ளிவி ழாதினித் துயர்மனங் கள்ளத்தில்,
தாயான கருணைக்கை சேயெனை நடத்திடச்
சத்தியசுத்த சன்மார்க்க நிலைபெறும் (அந்த)

## 38. கனவிலாகிலும் வந்து

இராகம் : நீலாம்பரி] [திரிபுடை தாளம்

பல்லவி

கனவி லாகிலும் வந்தென் கலிதீர்க்க லாகாதோ ?
கனகசபை அப்பனே ! (கனவி)

அநுபல்லவி

மனதுசஞ் சலப்பட்டு மருந்தொன் றும் அறியாமல்,
தினமிறைவா வுனையே
தெண்டனிட்டுக் கூவினேன் (கனவி )

சரணம்

குஞ்சித பாதத்தைப் பிடித்தேன்—என்
குறைகளைச் சொல்லிக் கண்ணீர் வடித்தேன் ;
தஞ்சமென் றுன்கை யென்னை விடுத்தேன்—சிவ
தாரக நாமமே படித்தேன் ;
வஞ்ச முயலகனை வாட்டிய பாதனே,
வாத வூரார்க் கொளி காட்டிய வேதனே,
நஞ்சை நயந்தமரர் நலிவுதீர் நாதனே,
நானு னென வுள்ளே நடமிடும் போதனே ! (கனவி)

## 39. பரிபக்குவம் தருவாய்

ஸ்ரீ ராகம்] [தேசாதி தாளம்

பல்லவி

பரிபக்குவம் தருவாய் பரனே !
பாராமல் உலகைப் பார்த்திருக்கும் சாந்த (பரி)

அநுபல்லவி

அரிதான இந்த நரஜீவ னத்தை
அமர ஜீவனமாய் ஆக்கி யின்புறவே (பரி)

சரணம்

சித்த யோகவரர் தத்வமஸி யென்னும்
திருமந் திரத்தின் பொருளை யுணர்ந்தே...
சுத்தஜோதி ஜீவன் முக்த னுகி யென்றும்
சுதந்தரமான பதந்தனில் வாழப் (பரி)

## 40. அத்தா அருளில்லையோ ?

இராகம் : சஹானு] [சாபு தாளம்

பல்லவி

அத்தா அருளில்லையோ ?—என்னைத்தடுத்
தாள மனம் இல்லையோ ? (அத்தா)

அநுபல்லவி

பித்தா என்றவர்மீதும் பிரியம் வைத்த கருணைச்
சித்தா—பரமபரி சுத்தா—அனுதி முத்தா (அத்தா)

சரணம்

சொல்ல முடிந்ததெல்லாம்
சொல்லிச் சொல்லி யலுத்தேன் ;
தொல்லை செய்கிறேனென்று
சோதிக்க நினைத்தாயோ ?
வில்லாலும் கல்லாலும் வீசி யடித்தவரை
வேண்டி, முன்னே தோன்றி,
ஆண்ட தயாநிதியே ! (அத்தா)

## 41. ஏனோ தாமதித்தாய்?

இராகம் : சித்தரஞ்சனி] [ஆதி தாளம்

பல்லவி

ஏனோ தாமதித்தாய்?—ஈசனே
எனது முறைகளை அனுதினங் கேட்டுமே (ஏனோ)

அநுபல்லவி

ஞானோ தயகுரு வாகமுன்வந்தே—பர
மோன சாதனஞ் சொல்லி முத்திநெறி காட்ட (ஏனோ)

சரணம்

மனமோ சஞ்சலச்சேய்—ஆசையதனை
மயக்கிடும் வஞ்சகப்பேய்;
சினமே என்பெருநோய்—ஆணவம் அதைத்
தினமும் வளர்த்திடுந் தாய்;
இந்தவா ளரக்கர்கள்
வெந்துநீ ருகக்கனல்
சிந்து நெற்றிக்கண் காட்டி
வந்தென்னை யாட்கொள்ள... (ஏனோ)

## 42. கல்லோ உனது நெஞ்சம்?

இராகம் ; ஸஹானு] [தேசாதி தாளம்

பல்லவி

கல்லோ உனது நெஞ்சம் ஐயா?—என்னைக்
கடைக்கண் பாராயோ கொஞ்சம்? (கல்லோ)

அநுபல்லவி

அல்லும்பகலும் 'நம சிவாய' அபயம் என்றே
சொல்லிச் சொல்லிக் கெஞ்சும்
சுத்தன்மே லேனோ வஞ்சம்? (கல்லோ)

சரணம்

அப்பனே என்றடி பற்றும் அடியார்க்குன்
அன்பை மறைப்ப தாமோ?
தப்பிதம் பலகோடி செய்த மகனையும்
தந்தை வெறுக்கப் போமோ?
இப்பரு வுடலிலே என்னுயிர்க் குயிராகி
இதயக் குகையில் இருப்பாய்
அறிவனே, நான்வைக்கும்
முறைகளைக் கேட்டெனது
குறைகளைத் தீராயோ
இறைவனே, இறைவனே! (கல்லோ)

## 43. என்னைக் கை விடுவாயோ?

**இராகம் : சிம்மேந்திரமத்திமம்] [ஆதி தாளம்**

**பல்லவி**

என்னைக்கை விடுவாயோ?—விட்டாலும்
உன்னடி விடமாட்டேன்! (என்னை)

**அநுபல்லவி**

மின்னுடல் வாழ்விலே என்னென்ன நேர்ந்தாலும்
உன்னருட் செயலென்றே இன்னலைச் சகித்திடும் (என்னை)

**சரணம்**

துட்ட மனக்குரங்கை எட்டிப் பிடித்திழுத்தே,
துள்ளல் அடக்கி நாளும்
மெள்ள மெள்ளப் பழக்கி,
நட்ட திருவடியில் கட்டி யொழித்துவிட்டு,
**நமச்சிவாயவோம்** என்றே
நம்பி யிருக்கும் அன்பன் (என்னை)

## 44. மன்னித்து மறந்திடுவாய்

**இராகம் : மத்தியமாவதி] [ஆதி தாளம்**

**பல்லவி**

மன்னித்து மறந்திடுவாய்—என்பிழைகளை
மாறப் புரிந்திடுவாய்—சிவனே (மன்)

**அநுபல்லவி**

அன்னையே, அப்பனே, உன்னைச் சரண்புகுந்தேன்;
அடித்தது போதும் இனி எடுத்தெனை ஆளுவாய் (மன்)

**சரணம்**

நானொரு முரட்டுப் பிள்ளை—என்றால் உனக்கு
நாளும் பெரிய சள்ளை;
மானமில் லாத மடையன்—உன் வார்த்தையை
மதிக்காது கெட்ட நடையன்;
ஈனனேனும் உனது ஞானவர மளித்தால்
எனது குறைகளெல்லாம்
இரவிமுன் பனியாமே (மன்)

## 45. அருணோதயம் வருமோ ?

**இராகம் : ஆரபி]** **[ஆதி தாளம்**

**பல்லவி**

அருணோதயம் வருமோ ? என் வாழ்க்கையும்
ஆனந்த நிலை பெறுமோ ?—சிவகுருவே (அரு)

**அநுபல்லவி**

இருளகந்தை மாயையில் ஏங்கி ஏங்கித் தவித்துன்
அருளுதயத்தைத் தினம் ஆர்வமுடன் கூவினேன் (அரு)

**சரணம்**

ஆதாரத் தாமரைகள் அலர்ந்து சிவங்கமழ,
ஆயிர விதழ்ப்பூவில் அமரத்தேன் பருகிட,
மேதினி யெங்குமுன் ஜோதி முகங்காண
வேதப் பொருளின்அநு பூதி நலம்பெறவே (அரு)

## 46. காலடித் துகள்பெறு

**இராகம் : முகாரி]** **[சாபு தாளம்**

**பல்லவி**

காலடித் துகள்பெறுக் கசடன் எனக்குமுன்
கடைக்கண் இரங்கிடுமோ ? (காலடி)

**அநுபல்லவி**

மாலடி யாலளந்த மண்ணிலும் விண்ணிலும்
மமதை பிடித்தலையும்
மடையன் எனைப்போலுண்டோ ? (காலடி)

**சரணம்**

நானே கடவுளென்று நாக்கினை உருட்டுவேன் ;
நாமாதி சாதனம் ஏமாற்றும் புரட்டென்பேன் ;
காமாதிக் கள்ளரைக் கைகட்டித் தாங்குவேன் :
கம்பளி என்றெண்ணிக் கரடியை வாங்குவேன்-உன்
(காலடி)

## 47. காத்திருக்கின்றேன்

**இராகம் : சாமா]** **[ஏக தாளம்**

**பல்லவி**

காத்திருக் கின்றேன்—என் ஐயா
கடைவாசலில்—ஏழை (காத்தி)

**அநுபல்லவி**

நாத்திக உலகென்னை நகைக்க
நண்பரும் பகைக்க—பொறுமையாய்க் (காத்தி)

**சரணம்**

அகங்காரச் சேவகர் அறற்ற
அடிமையென் றென்னைச் செல்வர் மிரட்ட,
சகமாயை வலைவீசி மருட்ட—சுற்றும்
சாதிப் பொருமைகள் வெருட்ட,

குண்டுணி நாய்பின்னே குலைக்கக்—கடுங்
கோபப் புயலும் வந் தலைக்க,
பெண்டுகள் எனைப்பரி கசிக்க—இந்தப்
பேய்க்கூத்தெல்லாம் மிகக் சகித்தே—ஐயா
பெரிய மனது செய்து
பிரிய முட னொருநாள்
'வருக'வென் றழைத்திடும்
ஒருமொழி கேட்கவே (காத்தி)

## 48. என்முகம் பார் ஐயனே

**இராகம் : காபி]** **[ஆதி தாளம்**

**பல்லவி**

என்முகம் பாரையனே—உனையன்றி
என் துணை யாரையனே? (என்)

**அநுபல்லவி**

பொன்முகத் துறைகளின் வன்முகங் கண்டுவாடி...
உன்முகங் கண்டிட ஓடி வந்தேன் தேடி (என்)

**சரணம்**

பொய்ப்புல வழியிலே போந்துபோந் தேமாந்தேன்...
பூத வுலகின் குண பேதங்களால் அயர்ந்தேன்...
மெய்ப்பொரு ளின்பமே துய்த்திட விரும்பிநான்
மேவினேன் உன்னடிச் சேவக னாகவே. (என்)

## 49. கடைத்தேற வேண்டும்

இராகம் : செஞ்சுருட்டி] [ரூபக தாளம்

பல்லவி

கடைத் தேற வேண்டும் ஐயனே—உன்
கருணை யாலே (கடைத்)

அநுபல்லவி

மடத்தனமாகத் திரியும் மனத்தை
மடக்கிப் புலனை ஒடுக்கி நானும் (கடைத்)

சரணம்

வெறி பிடித்த வேங்கை போலே
விம்மும் அகந்தையைக் கம்மென் றடக்கி,
குறிகுணமற்ற அறிவை உள்ளே
கூடிக் கவலைப் பேயைச் சாடி,
கோதி லாத ஜோதி யான
ஆதி யேயுன் போதமுண்டு (கடைத்)

## 50. எப்படி யானறிவேன் ?

இராகம் : அசாவேரி] [சாபு தாளம்

பல்லவி

எப்படி யானறிவேன் ?—உன்மாயத்தை
என்னென் றியம் பிடுவேன் ? (எப்படி)

அநுபல்லவி

செப்படி வித்தைபோலே செகமெல்லாம் தோற்றி நீ
செய்வதெல்லாம் செய்தும் செய்யாத ரகசியம் (எப்படி)

சரணம்

சிறிதினும் சிறிதாகிப் பெரிதினும் பெரிதாகித்
திரிபில்லா வியல்பாகித் துரிய பரம்பொருளாய்,
அறிவினுக் கறிவாகி, ஆருயிர்க் குயிராகி,
ஆதாராதீதமும் அருட்பெருஞ் சோதியே (எப்படி)

## 51. எண்சாண் உடம்பு

இராகம் : ஹனுமதோடி] [ரூபக தாளம்

பல்லவி

எண்சாண் உடம்பென்னும் குடும்பம்—அதில்
எத்தனை ஆயிரம் இடும்பை—சிவனே! (எண்)

அநுபல்லவி

பெண்சாதியாம் மானஸி—அவள்
பெரிய படு ராக்ஷஸி—ஐயா! (எண்)

சரணம்

ஐம்புலக் கதவை உடைத்தே—என்
அறிவினைக் கொள்ளை யடித்தே,
வம்பு செய்யும் சேய்கள்—என்
வாயைப் பிடுங்கும் பேய்கள்.........ஐயே! (எண்)

பொய்யகங் கார முரடர்—அவர்
பொழுதைக் கொலைசெய்யும் கொடியர்,
வெய்ய காமா வேசர்—தெரு
வேசைக் கெல்லாந் தாசர்—ஐயே! (எண்)

ஆத்திரச் சுற்றத்தார் நாத்திக வாதிகள்
ஆளைச் சுருட்டிடும் ஆஷாட பூதிகள்...
காத்தருள், கலி தீர்த்தருள்—என்
கலக்கந் தீரக் கருணை பூத்தருள்! (எண்)

## 52. கவலை நீங்க

இராகம்: சாயாதரங்கிணி] [ஆதி தாளம்

பல்லவி

கவலை நீங்க ஒரு கருணை யில்லையோ?—என் (கவலை)

அநுபல்லவி

பலவினைகளிலே பட்டுப்பட்டு நாளும்
பரித விக்குமுயிர் பரிபாக மெய்திக் (கவலை)

சரணம்

சத்தும் அசத்துமாம் சகலான்மா மாற
சத்குரு வாகவே தயைசெய்து வந்து
முத்தியின்பந் தரும் பத்தி யின்பந் தந்து
மும்மலத்தைப் போக்கி
மூடனேனும் ஆளாய்க் (கவலை)

## 53. எப்படிக் கூடுவேன்?

**இராகம்: கண்டா]** **[திரிபுடை தாளம்**

**பல்லவி**

எப்படிக் கூடுவேன்? எங்கே தேடுவேன்?
இறைவா, இறைவா, இறைவா—உன்னை! (எப்படி)

**அநுபல்லவி**

இப்படி நாளுமே செப்படி வித்தைகாட்டிக்
கற்பனை யுலகிலே கண்கட்டி யாட்டினல் (எப்படி)

**சரணம்**

காலையிரவி நெற்றிக் கண்ணெனவே காண்பேன்;
கடியரவையும் கொற்றைச்
சடையனென்றே பூண்பேன்;
மாலையிலே அந்தி வண்ணன்வந் தான் என்பேன்;
மணியிர வென் சாமி
அணிபுலித் தோலென்பேன்;
மனக்கவிக் கனவிலே
மருவிய உருவன்றி,
உனக்கினுந் தயவில்லை
தனிப்பெருங் கருணையே! (எப்படி)

## 54. கண்ணாரக் காண்பது

**இராகம்: கமாஸ்]** **[சாபு தாளம்**

**பல்லவி**

கண்ணாரக் காண்பதெப்போ?
கனக சபையி லாடும்—எனது துரைராஜனைக் (கண்)

**அநுபல்லவி**

எண்ணி யெண்ணி யிங்கே
ஏங்கி யேங்கித் தவித்தே
ஏகாங்கி யாகி—சிவ
மோகங் கொண்டவென் னுள்ளம் (கண்)

**சரணம்**

போதசத் குருவாகப் பொருந்திப் பெருந்துறையில்
வாதவூ ரடிகளை வாழ்வித்த ஜோதியைக் (கண்)

திருவாச கந்தரும் பொருளிதென் றருளொளி
மருவி மறைந்த மணி வாசகர் போலவேநான் (கண்)

## 55. ஆசையைத் தீர்ப்பாய்

இராகம்: ஜயநாராயணி] [ஆதி தாளம்

பல்லவி

ஆசையைத் தீர்ப்பாய் பரமா—என்பே
ராசையைத் தீர்ப்பாய்! (ஆசை)

அநுபல்லவி

மாசிலாப் பூரண மாதவ சித்தியால்,
தேசத்திலே தெய்வ தீரரை ஆக்கிடும் (ஆசை)

சரணம்

உனதுவிண் குடைநிழல்
உயிர்க்கும் ஜீவர்களெல்லாம்,
உள்ளான்ம நேயராய்
உள்ளத்திற் கலந்துன்னை
எனதுன தென்ப தின்றி
எல்லாமுன் உடைமையாய்
இன்பச்சிற் சபையினில்
அன்புடன் வாழ்ந்திடும் (ஆசை)

## 56. ஹரஹர சம்போ

இராகம்: ரவிசந்திரிகா] [ஆதி தாளம்

பல்லவி

ஹரஹர சம்போ சிவகுரு நாதா,
ஆட்கொள்ள லாகாதா?—என்னை
ஆட்கொள்ள லாகாதா? (ஹர)

அநுபல்லவி

இரவுடன் பகலும் முறையிடும் மகனின்
இருவினை மாறவே
அருள்புரி யாயோ? (ஹர)

சரணம்

அஞ்ஞானம் போக ஆணவஞ் சாக
அகந்தனில் இருந்தே
உகந்ததைப் புரிந்தே
விஞ்ஞான கலனைய் விளங்கிட நானும்
வேதசைவம் ஓதுகின்ற
சாதனங்கை கூடவே (ஹர)

## 57. தஞ்சம் தஞ்சம் உன்னடி

இராகம் : கேதாரம்] [ரூபக தாளம்

பல்லவி

தஞ்சம் தஞ்சம் தஞ்சம் உன்னடி
சத்குரு நாதனே (தஞ்)

அநுபல்லவி

அஞ்சல் அஞ்சல் என்றோர்
செஞ்சொலால் என்னுளம்
பஞ்சகோ சாதீத ப்ரம்மத்தைக் காட்டினே (தஞ்)

சரணம்

அத்தனே சுத்தனே அத்யாத்ம போதனே
ஆனந்த நாயகனே,
நித்திய முத்தனே தத்துவா தீதனே
நின்மலச் சின்மயனே,
தத்வமஸி யென்னும் அத்வைதா னுபவ
சித்தனே சக்தனே
சிற்றம்ப லத்தனே (தஞ்)

## 58. அல்லும் பகலும்

இராகம் : நாதநாமக்கிரியை] [திரிபுடை தாளம்

பல்லவி

அல்லும் பகலு முன் செல்வத் திருவடியில்
அமுதுண் டிருக்க வருளாய்—பரம்பொருளே (அல்)

அநுபல்லவி

சொல்லுக் கடங்காத ஜோதிப்ரம் மானந்த
சொரூப சாக்ஷாத்காரம் அருளும் குருநாதனே (அல்)

சரணம்

காணக்காண உன்னைக் கவலைமலை கரைந்து
கதிர்முன் பனி யாகுதே,
தீனர் மயக்கந் தீர்க்கும் ஞான சஞ்சீவியே,
ஜீவன் முத்தியை வேண்டி
தியானமலர் தூவியே (அல்)

## 59. சங்கீதாஞ்சலி செய்குவோம்!

**இராகம் : கல்யாணி]** **[திரிபுடை தாளம்**

**பல்லவி**

சங்கீதாஞ்சலி செய்குவோம்—சிவ
ஷண்முகனுக்கு சுத்த ஹ்ருதய குகனுக்கே—நாம் (சங்)

**அநுபல்லவி**

தம்பூரா குழல் வீணை தாள மேளங்களுடன்
சரிகம பதநியெனும் ஸப்தஸ்வர வேதத்தால் (சங்)

**சரணம்**

செந்தில் ஆண்டவன், வீர தேவசேனாதிபன்,
செங்கதிர் வேலவன், தீரன் ஞான ப்ரதீபன்,
கந்தன், வள்ளி தெய்வானை காந்தன், கருணை வேந்தன்,
காங்கேயன், அடியாரைத் தாங்கும் குமரனுக்கே (சங்)

## 60. ஆரோ வந்தென்னை

**இராகம் : சுத்தபங்காளா]** **[ஆதி தாளம்**

**பல்லவி**

ஆரோ வந்தென்னை ஆசை காட்டி மறைந்தான்,
அவனையே தேடித்தேடி அலைகுதென் சித்தமே! (ஆரோ)

**அநுபல்லவி**

பேருமறியேன்; அவன் ஊரும் யான் அறியேன்;
பெற்றவர் யாரெனக் கற்றவரும் அறியார்! (ஆரோ)

**சரணம்**

கண்ட திசைகளெல்லாம் கண்ணாலே பேசிக்
காணாமல் ஒளிந்தஎன் கள்ளன் முகந்தோன்றுதே!
விண்டவர் கண்டிலர்; கண்டவர் விண்டிலர்;
விந்தை முறுவல் செய்தோர்
மந்திரப் பொடிதூவி (ஆரோ)

## 61. இவனுரோ சகியே?

இராகம் : சங்கராபரணம்] ] ஆதி தாளம்

பல்லவி

இவனுரோ சகியே ?—என்னெதிரிலே
இரவிபோல் வந்த சுகியே ! (இவ)

அநுபல்லவி

சிவனுர் தரும் இள—மகனுரோ ?—ஷண்
முகனுரோ ?—ஹ்ருதய குகனுரோ ? (இவ)

சரணம்

நங்கை, யெனது மான பங்கம் செய்தானடீ ;
நாணத் துடனே ஒரு
கோணற் பார்வை பார்த்ததும்,
கொங்கை துடிதுடிக்கச் செங்கையா லணைத்துள்ளங்
கொள்ளைகொண்டு போன
கள்ளன் என் காதலன் ! (இவ)

## 62. மறவாமல் இரு மனமே

இராகம் : சூலினி] [திரிபுடை தாளம்

பல்லவி

மறவாமல் இரு மனமே—சுப்ரஹ்மண்யனை
மறவாமல் இரு மனமே ! (மற)

அநுபல்லவி

மறலியை உதைத்தவன் மகனை, ஷண்முகனை நீ (மற)

சரணம்

அறிவான நெஞ்சிலே அன்பான மலரினல்
அருளான வரத்தையே ஆசித்துப் பூசிப்பாய் !
இறவாமல் என்றைக்கும் பிறவாமல் இருக்கலாம் ;
இல்லற வாழ்விலும்பே
ரின்பத்தைப் பெருக்கலாம் (மற)

## 63. அடைக்கலம் புகு மனமே

இராகம் : முகாரி] [ஆதி தாளம்

பல்லவி

அடைக்கலம் புகுமனமே!
அரன்மகனைத்—திருப்
பரங்கிரி வேலனை (அடை)

அநுபல்லவி

கடைக்குண மாகிய காமக் குரோத லோபக்
கசடுகள் நீங்கிட நிசஞான மோங்கிட (அடை)

சரணம்

ஆறுதலைத் தரும் ஆறுமுக வேலவன்;
அரக்கர் காலன்—உண்மை—அன்பர்க்கனுகூலன்;
வீறுதரும் முருகன், விரும்புங் கவி வரதன்;
வேதலோங் காரப் பொருள்
ஓதுங் குருபரனை (அடை)

## 64. கைவிடாதே துரையே

இராகம் : சங்கராபரணம்] [ஆதி தாளம்

பல்லவி

கைவிடா தே துரையே—உன்னை யன்றிக்
கதியெனக் கார், இறையே? (கைவி)

அநுபல்லவி

பொய்யனு கிலும் உன்பேர் புகன்று புகன்று நிதம்
மெய்சிலிர்த்துப் பணிந்தேன்
ஐயா உன் னடிமைநான் (கைவி)

சரணம்

முற்றிலும் உலகினைச் சுற்றிச் சுற்றி யலுத்தேன்;
மோக தாக சோக போக சுகமும் பார்த்தேன்;
பற்றுவ தினியுன்றன் பற்றன்றி மற்றில்லேன்;
பார்வதி ரமணு என் ஆர்வத்தைக் கூறினேன் (கைவி)

## 65. ஓம் சிவஷண்முக ஓம்

**இராகம் : பைரவி]** **[ஆதி தாளம்**

**பல்லவி**

ஓம்சிவ ஷண்முக—ஓம் என்றே அனுதினம்
நாமஜபம் செய் மனமே ! (ஓம்சிவ)

**அநுபல்லவி**

சாமி மலையில் வாழும் சத்குரு பரமாத்மன்
சேம மளிப்பான்—என்றும்
நேம நிஷ்டையுடனே (ஓம்சிவ)

**சரணம்**

நாலு வேதப்பொருளும், நாலு கவித்திறனும்,
நாலு புருஷார்த்தமும் நல்கி யன்பரைக் காப்பான் :
பால சுப்ரஹ் மண்யன் கோல வடிவை யெண்ணி,
பக்தி பரவசத்தால்
சித்த சுத்தியுடனே (ஓம்சிவ)

## 66. முருகன் என்றதுமே

**இ-ம் : இராகமாலிகை]** **[திஸ்ர ஏக தாளம்**

**செஞ்சுருட்டி**

முருகன் என்றதுமே—எனக்கோர்
மோகம் பிறக்குதம்மா !
அருகில் வாரானோ ?—என்றபே
ராசை துடிக்குதம்மா !

**பைரவி**

உள்ளம் உருகுதம்மா—என்
ஊனும் உருகுதம்மா !—அவனை
அள்ளிக் கலந்திடவே—என்
ஆர்வம் பெருகுதம்மா !

**உசேனி**

புள்ளி மயில் மேலும்—அவனைப்
புல்லிச் சுகம் பெருகும்
வள்ளி மயில்மேலும்—எனக்கோர்
வன்மம் வளருதம்மா !

முருகன் என்றதுமே

ஆனந்த பைரவி

வேலை நினைத்துகொண்டால்—அவன் விழி
வேலை நினைத்துக் கொண்டே
மாலைப் பொழுதினிலே—எனக்கொரு
மயக்கம் காணுதம்மா !

காம்போதி

சூரனைச் சுட்டவனும்—திரி
சூலிக் கனல் மகனும்—ஐய
வீரசி காமணியாம்—அவனென்
வேதனை தீராதோ ?—சகியே
வேகமாய் வாராதோ ?

## 67. முருகனை நினை மனமே

இராகம் : ஆகிரி] [திரிபுடை தாளம்

பல்லவி

முருகனை நினை...மனமே—சதா காலமும்
முருகனை நினை மனமே ! (முரு)

அநுபல்லவி

உருகி உருகி உள்ளம்
பெருகிக் கண்ணீர் அருவி (முரு)

சரணம்

இரவும் பகலும்போலே வரவும் போக்குமாகிய
இருவிகா ரவுலகில் நிருவிகா ரமாகவே,
'சரவண பவசிவ ஷண்முகா ஓம்' என்றே
சரண்புகுந்து ஜபித்தால் மரணபயமும் தீரும்(முரு)

## 68. பழநியப்பன் துணையே

இராகம் : மோகனம்] [திரிபுடை தாளம்

பல்லவி

பழநியப்பன் துணையே—நம்பினபேர்க்குப்
பாரினில் யாவர் இணையே (பழநி)

அநுபல்லவி

குழகன் கதிர்வடிவேற் குமரன் அமரர் போற்றும்
அழகன், சிவப்புதல்வன், ஆறுமுகன், குகன் (பழநி)

சரணம்

அஞ்சவரும் பகையைப்
பஞ்சுபட உதைப்பான் ;
வஞ்சநிருதர் வீழச்
செஞ்சுடர் வேலெடுப்பான் ;

தஞ்சமென் றவர்தூய
நெஞ்சினி லேயிருப்பான் ;
துஞ்சாக் குண்டலிசக்தி
கொஞ்சிக் குலாவுகின்ற (பழநி)

## 69. கண்டவர் மறவாரே

இராகம் : வசந்தம்] [ஆதி தாளம்

பல்லவி

கண்டவர் மறவாரே—கண்ணை வுன்னைக்
கலந்தவர் பிரியாரே ! (கண்)

அநுபல்லவி

மொண்டென் உயிரை உண்ட மோகனக் காந்தனே (கண்)

சரணம்

நீலமதிபோல் முகமும்—அதிலேமுத்து
நிலவொளிர் கனி நகையும்,
வேலைப்போலே விழியும்—அதில் விளங்கும்
வீரக் கருணை ஆழியும்,
சோலை மலர்போல் வனப்பும்—அதன்மிசை
சொக்குந் தெய்வக் கனலும்,
ஞாலத்தை வசஞ்செய்யும் கோலத்தைக் கொண்டருள்
பாலித்தென் மனையினுள் கால்வைத்த காட்சியை (கண்)

## 70. பால கோபாலனே

இராகம் : ஆனந்த பைரவி] [ஆதி தாளம்

பல்லவி

பாலகோ பாலனே, பக்ஷம்வைத் தாளுவாய்
பரமா னந்த லீலனே ! (பால)

அநுபல்லவி

ஞாலத்தி லேயாத்ம ஞானபக்தி கர்மத்தால்
கோலத் திருவாழ் வெய்தக் குழலிசை பரவிய (பால)

சரணம்

வஞ்சனை யரக்கியின் மாயவுயிர் குடித்தாய் ;
வாரிச்சென்ற தானவன் பாரில் வீழ மடித்தாய் ;
நெஞ்சில் வந்திடர்செய்யும் வெஞ்சினப் பேய்களை
நீறுசெய் துன் அன்பில்
மாறில்லா திருக்கச் செய் (பால)

## 71. அது நீ யென்றறிவாய்

இராகம் : சுருட்டி] [ஆதி தாளம்

பல்லவி

அது நீ யென்றறிவாய்—மனிதா
அது நீ யென்றறிவாய் ! (அது)

அநுபல்லவி

எதுவே உயிர்க்குயிராய்ப்
பொதுநடம் புரிவதோ (அது)

சரணம்

சடத்தினை அசைத்திடும் சக்தி மயமாகி
சதஸத் விலாஸமாய், சாட்சி சேதனமதாய்,
திடவை ராக்கிய தீரரின் தியானத்தில்
சின்மய தீபமாய்ப் பொன்மய ஒளிதரும் (அது)

பேதமில் லாதது, பிறப்பிறப் பற்றது,
பிரியாத உணர்வது, பேரின்ப மானது,
சாதிமத மில்லாத போத சொரூபமாம்,
சத்திய நித்திய சாந்தசுத் தான்மா ! (அது)

## 72. ஸ்ரீராம் ஜயராம்

இராகம் : நாராயணகௌளை] [ஆதி தாளம்

பல்லவி

ஸ்ரீராம் ஜயராம் ஜயஜயராம் (ஸ்ரீ)

அநுபல்லவி

'நாரா யணஓம் நமச்சி வாய'வெனும்
சாரமான நல்ல தாரக மந்திரம் (ஸ்ரீ)

சரணம்

சஞ்சலத் தைக்கெடுத்துச் சாந்தத்தைக் கொடுப்பது ;
அஞ்சலென்றே என்றும் அச்சம் ஒழிப்பது ! (ஸ்ரீ

காமாதி யரக்கரைக் கட்டுடன் அழிப்பது ;
நேம நிஷ்டையுள்ள நெஞ்சிலே செழிப்பது ! (ஸ்ரீ)

ஆரமு தினும் இன்பம் அன்பருக்காவது ;
நாரத முனி சொன்ன ஞானத்திரு மந்திரம் (ஸ்ரீ)

## 73. குருநாதன் அவனே !

இராகம் : மத்யமாவதி] (ஆதி தாளம்

பல்லவி

குருநாதன் அவனே—அவனை நீ
கும்பிடு நன் மனமே ! (குரு)

அநுபல்லவி

இருவிகாரப் பகையின் இடர்களைக் களைந்தவன் ;
இருந்தபடியே யிருக்கும் இரகசியம் அறிந்தவன் ! (குரு)

குருநாதன் அவனே!

சரணம்

ஆசையாங் காரத்தை அழித்த ஞான தீரன்;
அமைதியில் ஆடிடும் அன்னத்தைப் போன்றவன்;
மோசம்போ காதுலகில் முற்றிலும் விழித்தவன்;
மும்மல வாழ்க்கையின் மோகத்தை அழித்தவன் (குரு)

காலமத யானை கவளம்போல் விழுங்கிடும்,
காம வுலகத்திற் கண்கெட் டலையாதான்;
ஞால நாடகத்தின் கோலங்கள் எவற்றிலும்
நானெனும் பற்றில்லா மோனமுடி வேந்தன்! (குரு)

யாரையும் இகழாமல், யாரையும் புகழாமல்,
யாரையும் கெஞ்சாமல், யாரையும் கொஞ்சாமல்,
ஊருக் குபகாரியாய் யாருக்கும் பாரமின்றி
உண்மைப் பொதுவெளியில் உலவிடும் யோகியாம் (குரு)

சண்டமா ருதத்திலும் சலியாத விளக்கவன்;
தமவிருள் போக்கிடும் தங்கக் கதிரோனவன்;
கொண்ட லிசைத்திடக் குதிக்கு மயிலனையான்;
'கோஹம், ஸோஹம்' என்றே கூவுங் குயிலனையான்! (குரு)

## 74. இதயகுகை நடுவில்
## (திருப்புகழ்)

இராகம்; கானடா] [தேசாதி தாளம்

இதயகுகை நடுவில் மனது லயமடைந்தே
இருந்தபடி யிருந்து—மகிழ்வேனோ?

உதய நிலை யொடுங்கி உயிரிற் கலந்துறையும்
ஒருபொருளை யுணர்ந்தவ்—வறிவாகி,

அதன் உயர்ந்த துரிய முடியில் நிராசை யெனும்
அமிர்த சஞ்சீவிரசம்—பருகேனோ?

பதியன் பளித்து வளர் மவுனப் பெருவெளியில்
பரம சுகமளித்த—நடராஜா!

## 75. ஜோதி ஞான

(காவடிச் சிந்து)

இராகம் : செஞ்சுருட்டி] [மிஸ்ரஏக தாளம்

ஜோதி ஞானச் சுகோதயப் பொன்முகந்
தோற்றுவாய்—துயர் மாற்றுவாய்!
ஆதி சக்தி அமுத பயோதரி
அம்பிகே—உன்னை—நம்பினேம்!
தீதை வெல்லுந் திறமைதந் தெம்மனந்
தேற்றுவாய்—கடைத்—தேற்றுவாய்!
காத கப்பகைக் காட்டை யெரித்திடுங்
காளியே—வீர—நீலியே!
பார் முழுதும் பசும்பொன் வளங்களைப்
பாலிப்பாய்—அரு—ளாலிப்பாய்!
சீரெ லாந்தருஞ் செல்வி மகாலக்ஷ்மி
தேவியே—எங்கள்—ஆவியே!
பூர ணக்கவி பொங்கத் திருவுளம்
பூத்தருள்—எம்மைக்—காத்தருள்!
வாரி வாரிக் கலைவரந் தந்திடும்
வாணியே—வீணா—பாணியே!

## 76. புண்ணியர் நாடே!

இராகம் : குந்தலவராளி] [திஸ்ரஏக தாளம்

புண்ணியர் நாடே, பூரணர் நாடே!
புகழ்மிகு பாரத நாடே!
விண்ணெளிர் நாடே, வித்தகர் நாடே!
விதவித வளந்தரு நாடே! (புண்)

மாரதர் பலமும், வங்கரின் கலையும்,
மங்கலத் தமிழிசை யமுதும்,
சீரிய சிங்கரின் வீறுடன் கூர்ச்சரர்
செல்வமும் மல்கிய நாடே! (புண்)

புத்தரின் சாந்தப் புன்னகை யொளியும்,
பூரண யோகியர் கனலும்,
சித்தரின் அறிவும், பக்தரின் அன்பும்,
தீரரின் வீரமும் பொலியும் (புண்)

### புண்ணியர் நாடே!

எம்முளந் துடிக்கும் இன்னுயிர் நாடே!
எம்விழிக் கொளிதரு நாடே!
எம்மன நிம்மதி யெய்துநன் னாடே!
எங்களை யீன்றபொன் னாடே. (புண்)

## 77. சிற்றம்பலத் துரையை
(காவடிச் சிந்து)

இராகம்: கரஹரப்ரியா] [ஆதி தாளம்

சிற்றம்ப லத்துரையைக் கண்டேன்—என்
சிந்தை குளிர முன்னே நின்றேன்!
முற்று மௌனமயக்கிப் பற்றிக் கொண்டதவன்
மோகம்—சி—வோஹம்!
நெற்றி விழிநெருப்பைக் காட்டி—என்
நீசக் கவலைகளை வாட்டி,
கற்றதெல் லாமறக்கக் கற்றுக் கொடுத்தான்—சிவ
காமம்—திரு—நாமம்! (சிற்)

தனித்த கயிலையிலே வசிப்பான்—அவன்
தமிழின் அமுதமுண்டு குதிப்பான்!
எனக்கும் தனது சொந்தக் குலத்தில் இடங்கொடுத்த
நேசன்—ஜக—தீசன்!
அனைத்தும் அறிந்ததவ யோகி—விளை
யாடிக் களிக்கும் சுத்த போகி!
இனித்த உயிர்க்கனலாய் இதயக் குகையிலெங்கும்
இருப்பான்—அருள்—சுரப்பான்! (சிற்)

## 78. பல்லாண்டு

இராகம்: காம்போதி] [சாபு தாளம்

பல்லவி

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயி ரத்தாண்டு
வாழ்கநீ பாரதத்தாய்! (பல்)

அநுபல்லவி

எல்லா வளங்களும், எல்லா வரங்களும்
ஈந்துல குய்ந்திடவே! (பல்)

பல்லாண்டு

சரணம்

உன்மணி மார்பமு துண்ட குழந்தைகள்,
உன்னிசைக் கே உயிர்ப்போம்!
உன்னுத்ம சக்தியால் இன்னலெல் லாந்தீர
உலகைவென் றுய்குவிப்போம்! (பல்)

பற்றலர் நடுங்கிடப் பந்தங்கள் சிந்திடப்
பரம சுதந்தரராய்,
ஒற்றுமை கொண்டிங்கே ஓர்குல மக்களாய்
ஓங்கக் கருணை செய்தாய்! (பல்)

## 79. சக்திக் கனல்

இராகம் : சுப பந்துவராளி] [திரிபுடை தாளம்

பல்லவி

சக்திக் கனல் வளர்ப்போம்—சுத்த
சக்திக் கனல் வளர்ப்போம் (சக்தி)

அநுபல்லவி

பக்திக் கனலால் பரிசுத்த மாகியே
முக்தி யளித்திடும் மூலகுண்டலியான (சக்தி)

சரணம்

துச்ச நினைவுகளைப் போக்குமே,
தூய சுதந்தரத்தைக் காக்குமே;
நச்சுந் தினவுகளை நீக்குமே,
நல்லசெயலில் வெற்றி யாக்குமே;
அச்சப் பெரும்பிழையைத் தாக்குமே,
'அமரன்யான்' எனும்உணர் வூக்குமே;
கொச்சை யரக்கர்களை வீழ்த்துமே,
கொண்டாடும் அன்பர்களை வாழ்த்துமே!
கூற்றை யுதைத்தவனைப்
போற்றிப் பரமானந்த
ஊற்றை மிகப் பெருக்கி
ஆற்றல் அருளுந் தெய்வ (சக்தி)

## 80. அம்மா பரதேவி

இராகம் ; தேவகாந்தாரி] [திரிபுடை தாளம்

பல்லவி

அம்மா பர தேவி—உன்
அன்பே எனக் காவி ! (அம்மா)

அநுபல்லவி

இம்மானிட வேஷத்தை ஏந்திய சாந்தமே (அம்மா)

சரணம்

புன்னகை வாய் திறப்பாய்—என்னுள்உன்
போதவெள்ளம் சுரப்பாய் ;
இன்னலிடர்களைத் தவிர்ப்பாய்—அம்மா
இன்ப வரங்களெல்லாங் கொடுப்பாய் ;
தன்னல வகந்தையை அழிப்பாய்—மனச்
சஞ்சலப் பேயினை ஒழிப்பாய் ;
உன்குல மக்களாய் உலகெல்லாம் வாழ்ந்திடும்
ஒற்றுமை நாட்டிட நற்றவ சக்தியருள் (அம்மா)

## 81. பூரண யோக மஹேஸ்வரி

இராகம் : பைரவி] [ஆதி தாளம்

பல்லவி

பூரண யோக மஹேஸ்வரி தாயே,
புவனேஸ்வரி கதி நீயே—அம்மா (பூரண)

அநுபல்லவி

நாரணி, ஜீவோத் தாரணியே—சிவ
நாயகியே, மோக்ஷ தாயகியே—சக்தி (பூரண)

சரணம்

வீரரின் வீரமும், வித்தகர் ஞானமும்,
வேதத்தின் சாரமும்—நீயே !
தாரக நாமமும், தர்மார்த்த காமமும்,
• ஸஜ்ஜனர் க்ஷேமமும் நீயே—சக்தி (பூரண)

அரனரு ளாகவே ஐந்தொழில் புரிந்திடும்
ஆதி பராசக்தி நீயே !
வரதாயகி சுத்த கௌரி மனோன்மணி
வாசாம கோசரி நீயே—சக்தி (பூரண)

## 82. அன்னை, அன்னை அமுதம்

**இராகம் : இந்துஸ்தான் தோடி]** **[தேசாதி தாளம்**

**பல்லவி**

அன்னை அன்னை அமுதம் (அன்னை)

**அநுபல்லவி**

என்னைப் பேரின்பப்பசி
'தின்னு தம்மா—சும்மா (அன்னை)

**சரணம்**

ஆறு கமலந் தாண்டி, ஏறி ஸஹஸ்ராரத்தில்,
வீறுங் குண்டலிக் கனல்
சேரும் மதிமண்டலம்,
ஊறும் அமரானந்தத் தேறல் அருந்தி, யுடல்
மாறி சுத்தானந்தப்
பேறு பெறவேண்டினேன் ! (அன்னை)

## 83. சுத்த சக்தி

**இராகம் : தேவமனோஹரி]** **[தேசாதி தாளம்**

**பல்லவி**

சுத்தசக்தி ஜய சுத்தசக்தி ஓம் (சுத்த)

**அநுபல்லவி**

அத்துவித மான தத்துவப் பொருளின்
அனுபவந் தரும் ஆதிமந்திரமே (சுத்த)

**சரணம்**

அற்புத உலகை அசல சாட்சியாய்
ஆக்கி ஊக்கி நீக்கும் அருளாணை முதல்வன்,
சிற்சுகோ தயனும் சிவகௌரி நாதன்,
தியான சாதனத்திற் கானமந்திரமே (சுத்த)

## 84. நாராயணி சரணம்

இராகம் : வராளி] [ரூபக தாளம்

பல்லவி

நாராயணி சரணம்—தாயே
ஞானவாணி சரணம்—ஐய (நாரா)

அநுபல்லவி

ஆராதனை செய்யு மன்பர்க்குன்
அறிவுங் கலையும் திருவுந் தருவாய் (நாரா)

சரணம்

மடமை யிருளைப் போக்கி—எங்கள்
வாழ்வை மங்கல வீணையாக்கி,
கடமையான பணிகள் புரியக்
கல்வி செல்வம் நல்கி யருளாய் (நாரா)

ஆற்றல் மிகவும் வளர—உள்ளே
ஆத்மசக்தி ஜோதி ஒளிர,
வீற்றிருந்துள்ள மலரில் எம்மை
வீர—தீர—சூர—ராக்குவாய் ! (நாரா)

## 85. மயங்காதே மனமே

இராகம் : ஆனந்தபைரவி] [ஆதி தாளம்

பல்லவி

மயங்காதே மனமே—தோற்றத்தில்
மயங்காதே மனமே (மய)

அநுபல்லவி

தயங்கித் தயங்கிப்பல சாகஸங் காட்டியே
தாவியுனைப் பிடிக்கும் தந்திர மாயத்தில் (மய)

சரணம்

பாடியும் ஆடியும் ஊடியும் கூடியும்,
பந்தனை செய்துசு கந்தனைப் பறித்தபின்
மோடிசெய் தோடிடு மூர்க்க விலங்கை நம்பி
முத்தி கொடுக்கும் சிவ பக்தியை மறந்து நீ (மய)

நானுவுலகஞ் சித்த நாடக மென்றறிந்து,
நல்லதும் பொல்லதுங் கொள்ளைகொள் ளாமலுன்னை
நானு ரெனவாராய்ந்து, ஞானசொ ரூபங் கண்டு,
தானை தன்னிலையில் மோனைந்தந் துய்த்திரு (மய)

## 86. அம்மா உன்னையே

**இராகம் : பந்துவராளி]** **[சாபு தாளம்**

**பல்லவி**

அம்மா உன்னையே நம்பினேன்—பராசக்தி (அம்மா)

**அநுபல்லவி**

இம்மகி தலத்தினில் இல்லை வேறோர் துணை (அம்மா)

**சரணம்**

கவலைக் கடல்கடக்கக் கப்பலும் நீயே ;
கட்டற்ற கரைசேர்த்துக் காப்பவளும் நீயே ;
சவலைக் குழந்தையெனைத் தாங்குவ துன்பாரம் ;
சரண்புகுந் திருப்பதே சத்திய வேத சாரம் ! (அம்மா)

## 87. பக்தரக்ஷணி தாயே

**இராகம் : பியாகு]** **[தேசாதி தாளம்**

**பல்லவி**

பக்த ரக்ஷணி தாயே,
சக்தி பவானி ஓம் சக்தி பவானி ! (பக்த)

**அநுபல்லவி**

சக்தி பவானி—துக்க நிவாரணி (பக்த)

**சரணம்**

தீரர் வணங்கிடும் வீரமஹா காளி
சூரக்கனல் பெருகச் சுதந்தரம்—வீர
சுதந்தரம்—ஆத்ம
சுதந்தரம் தருவாய் ! (பக்த)

## 88. எல்லாம் நீயே அம்மா

**இராகம் : பூர்வகல்யாணி]** **[சாபு தாளம்**

**பல்லவி**

எல்லாம் நீயே அம்மா—பராசக்தி
எங்கும் நீயே அம்மா... (எல்லாம்)

**அநுபல்லவி**

சொல்லாலுன் மகிமையைச்
சொல்லவுங் கூடுமோ? (எல்லாம்)

**சரணம்**

கரையில்லாக் கருணை நீயே;—கார்மேகமும்,
காற்றும், கதிரும் நீயே!
வரையில்லாக் கடலும் நீயே;—உயர்
மலைவளர் நதியும் நீயே!
தரையெல்லாம் பயிரும் நீயே;—உயிர்களைத்
தாங்கும் இயற்கை நீயே!
பரிவான மாதாநீ, பரமாத்ம ஜோதிநீ,
அறிவான ஆன்மாநீ,—
அரனாரின் பாதி நீ! (எல்லாம்)

## 89. எனக்கென்ன மனக்கவலை ?

**இராகம் : தன்யாசி]** **[ஆதி தாளம்**

**பல்லவி**

எனக்கென்ன மனக் கவலை?—எந்தாய்க் கன்றோ
தினந்தின மென் கவலை (என)

**அநுபல்லவி**

மனத்திலும் செயலிலும் வாக்கிலும் நோக்கிலும்
அணைத்துமாய் நின்றென்னை ஆண்டவ ளிருக்கையில் (என)

**சரணம்**

அல்லலை ஓட்டுவாள், வல்லமை நாட்டுவாள்;
அம்புலி காட்டியும் அமுதினை ஊட்டுவாள்;
தொல்புவி யெனக்கொரு தொட்டிலாய் ஆட்டுவாள்;
சுத்தமுக்த சமத்வச் சுடரெனுள் ஏற்றுவாள் (என)

கண்மலர்க் கருணையால் புண்களைத் துடைப்பாள்;
கைம்மலர் ஆசியால் உய்கதி கொடுப்பாள்;
தண்ணருட் புன்னகையால் சக்திக் கனல் பெருக்கித்
தாங்கிடும் ஜகன்மோக ரூங்கி துணையிருக்க (என)

## 90. குடியிருப்பாய் மனமே

இராகம் : கல்யாணி] [தேசாதி தாளம்

பல்லவி

குடியிருப்பாய் மனமே—அன்னையருளில்
குடியிருப்பாய் மனமே—தினமே (குடி)

அநுபல்லவி

அடியார்க் கமைதிதரும் கடிமலர்ச் சோலையில்,
அன்புத் திருமனையில் இன்பம் பெருகி வரக் (குடி)

சரணம்

கனதன மயக்கத்தில் கருத்தைவிட் டலையாமல்,
கனவிலும் காமாதிக் கள்ளரால் உலையாமல்,
மனமொழி மெய்யினால் புனித பூசனை செய்தே
இனிவினை யுடலினில் என்றைக்கும் பிறவாமல் (குடி)

## 91. எழுந்திரு நிஜ மனிதா

இராகம் : பரசு] [ஆதி தாளம்

பல்லவி

எழுந்திரு நிஜ மனிதா—உள்ளத்தி னின்றே
எழுந்திரு நிஜ மனிதா ! (எழு)

அநுபல்லவி

அழுந்திருள் அகன்றது; செழுந்திரு, நகையுடன்
அருணன் எழுந்து ஞானக் கிரணம் பரப்பும் வேளை ()

சரணம்

காமமோ கினியினை நாமஜபத்தால் ஓட்டி,
கலங்கும் புத்தியை உண்மை
துலங்கும் அறிவால் தேற்றி,
தாமத மாயைகெட ஓம்சுத்தசக்தி யென்னுந்
தாரகம் கொண்டாத்ம
தீர வீர சூரனாய் (எழு)

## 92. பித்துப் பிடித்ததடீ

இராகம் : அடாணா] [ரூபக தாளம்

பல்லவி

பித்துப் பிடித்ததடீ—அம்மாஉன்
பேரின்ப வாரியில் யானின்ப நீராடப் (பித்)

அநுபல்லவி

புத்தலர் போன்றொளிர் முத்து நகையிலே
சித்தம் இழந்தென்னை முற்றும் மறந்தன்புப் (பித்)

சரணம்

வீரவிடுதலை தந்தாய்—உன்
வேல்விழியால் அகங் கொன்றாய்;
சூரியன் போலொளிர் காந்தி—என்னுள்
தூண்டினை ஆத்தும சாந்தி;
பாரெல்லாங் கோயிலாய்க் காட்டி—உன்
பக்திப் பணியினை நாட்டி,
தீரனாய் வாழெனச் சொன்னாய்—இன்பத்
தீயையுந் தந்தனை அன்னாய்...
என்னுள்ளே நீயென்றும்
உன்னுள்ளே நானென்றும்
என்பணி உன்பணி
என்றறி வேமிகப் (பித்)

## 93. நீயின்றி யார் என் துணை?

இ-ம் : இராகமாலிகை] [ரூபக தாளம்

பல்லவி

மத்யமாவதி

நீயின்றி யார் என் துணை?
நிகிலாண்ட சக்தி! (நீ)

அநுபல்லவி

தாயிழந்த சேயைப் போலே
தவித்திடும் எனக் கிரங்கி,
வாயினால் இனிது சொல்லி
மனக்கவலை தீர்த்தருள (நீ)

**முகாரி**

*காமுகாரி யான பாசக்
கடும்புலற் றிடும்பை தீரச்
சேமகாரி யான சக்தி
சிவசங்கரி த்ரிபுராந்தகி (நீ)

**கல்யாணி**

**கல்யாணி**, கருணாம்பிகே,
காத்யாயினி, மகாதேவி,
எல்லாமும் வல்ல தாயே,
ஏழைபங் காளி, காளீ ! (நீ)

**கானடா**

**கானடா**ர்ந்த காரிருளில்
கடும்புலி பிடுங்குகின்ற
மானென இம் மாயக் கூட்டில்
மயங்கித் தியங்கு மதலை வாழ (நீ)

**தோடி**

பயந்**தோடி**ப் பரிவு தேடிப்
பாதமலரைப் பற்றிக் கொண்டேன்!
நயந்தோரிடர் நலியக் காண்பாய்,
நாராயணி அபயம் அபயம் ! (நீ)

**ஆரபி**

**ஆரபி**மா னமும் வேண்டேன்,
அம்மாவுன தன்பே போதும்!
பாரபி மானமுங் கைத்ததுன்
பதத்திலே யபிமானம் வைத்தேன் ! (நீ)

**எதுகுலகாம்போதி**

**எதுகுலங்** கோத் திரமென் றில்லை ;
ஏகபோக வெள்ள மாகப்
பொதுநிலையிலெப் போதும் அருளும்
புவனேச்வரி நவசௌந்தரி (நீ)

---

***காமுகாரி :** காமுக + அரி (சத்துரு), = காமுகனுடைய சத்துரு.

### நீயின்றி யார் என் துணை ?

மோகனம்

மோகனாங்கி, முத்து கௌரி,
மூல வன்னி பாலாம்பிகே,
யோகபோகஸௌ பாக்ய லக்ஷ்மி,
ஓம்பராசக்தி, ஓம் பராசக்தி (நீ)

தஜ்ஜம் தகஜம் தளாங்கு தரிகிட
திமிகிட தக்கத்தா...
தத்தரிகிட தகஜணு தகஜணு
தளாங்கு தரிகிட தா,
தாகிட தகதீம் தின்னத் தாகிட
தரிகிட தகதீம் தின்ன
தோம் தோம் தோம் தோம் (நீ)

## 94. ஏன் பிறந்தாய் மனமே?

இராகம் - பைரவி] [ஆதி தாளம்

பல்லவி

ஏன்பிறந்தாய் மனமே—இவ்வுடலிலே ? (ஏன்)

அநுபல்லவி

கானிருட் காட்டினிலே,
கண்ணிலாச் சேய்போ லென்னைக்
கவலைக்கே ஆளாக்கித் திவலை யறிவுமின்றி (ஏன்)

சரணம்

நம்பன் பெயரைச் சொன்னால் நாத்திகம் பேசுவாய் ;
நாசக வினைக்கேநீ காசினை வீசுவாய் ;
துன்பப் படுகுழியில் துள்ளித் துள்ளி விழுவாய் ;
சுத்தசன் மார்க்கஞ் சொன்னாலோ தூங்கி விழுவாய் ;
அன்புள்ள பெரியாரை அலட்சிய மாக வைவாய் ;
ஆசைப்பிசாசுகளை ஆசோப சாரம் செய்வாய் ;
உன்பழிபாவத்தின் தின்மை யனுபவிப்பாய் ;
உள்ளத்தைச் சொன்னாலோ
வெள்ளெனவே சினப்பாய் (ஏன்)

## 95. வாது செய்வதேன்?

**இராகம் : தேனுக]** **[ஆதி தாளம்**

**பல்லவி**

வாது செய்வதேன், வம்பு மனமே?—தர்க்க (வாது)

**அநுபல்லவி**

மேதினியிங்கே மெய்யோபொய் யோவென்றே (வாது)

**சரணம்**

உடலுள்ள மட்டும் உலகுண் டுனக்கும்,
உடல்வந்த பயன் உணர்ந்து துணிந்துன்
கடமை காத்துப் பலனைக் கடவுளுக்கே தந்து
கவலையற்ற ஜன்ம கர்மமுக்தி யின்றி (வாது)

## 96. தெள்ளத் தெளிந்திடும்

**இராகம் : அடாணு]** **[ஆதி தாளம்**

**பல்லவி**

தெள்ளத் தெளிந்திடும் அருளே—உன்
சித்தத்தில் குடிகொண்ட பொருளே (தெள்)

**அநுபல்லவி**

கள்ளக் காமமயக்கம் கொள்ளை கொள்ளாதுன்னை
கண்விழித்திடின்-ஒரு-புண்ணிய ஜோதியாய்த் (தெள்)

**சரணம்**

ஆணவ மாயத்தை அடியுடன் போக்கிய
அந்தக் கரணத்தையே,
ஊணென்ன ஊட்டிடின் உண்மை யறிவாகி
உள்ளத்திற் பேரின்ப வெள்ளம தாகியே (தெள்)

## 97. சகஜ நிஷ்டையிலே

**இராகம் : ஸ்ரீரஞ்சனி]** **[தேசாதி தாளம்**

**பல்லவி**

சகஜநிஷ்டையிலே சுகமா யிருப்பாய்
சகவிகார மின்றி சாட்சி ஜீவனே (சகஜ)

**அநுபல்லவி**

அகமாயை யின்றி ஆராய்ந்து பார்த்தே
அகம்ப்ரம்மம் என்னும் அனுபவா னந்தமாம் (சகஜ)

**சரணம்**

இருவிகாரப்புயல் எற்றி மோதிடினும்
இமயமலைபோல இதயசாந்தியிலே,
ஒருவிகார மின்றி உறுதியா யிருப்பாய்;
ஒன்றுங் குறையில்லை, நின்றபடி நின்றால் (சகஜ)

## 98. போபோ ஜகன்மாயை

**இராகம் : பியாகடை]** **[ரூபக தாளம்**

**பல்லவி**

போபோபோ ஜகன் மாயையே—கிட்டவராதே
பொய்மனத்தின் சாயையே (போபோ)

**அநுபல்லவி**

'தோதோ'வென் றால் மீதேறித்
தோளை யொடிப்பாய்நீ
தோழன்போல் வந்தென்னை
வாழவொட் டாத டிப்பாய் (போபோ)

**சரணம்**

தின்னக் கொடுப்பதுபோல் அன்னத்தி லேபிடித்
தெருமண்ணைப் போட்டிடுவாய்;
அன்னைபோல் வந்துபின் அரக்கியாய் என்னைப்பேர்
ஆபத்தில் மாட்டிடுவாய்;
சிங்காரச் சேட்டைகள் காட்டி நடிப்பாய்;
சிக்கிய மூடரின் உயிரைக் குடிப்பாய்;
தங்கக் கரத்தினால் தட்டிக் கொடுப்பாய்;
தடிகொண்டு பின்னவர் தலையை யுடைப்பாய்
(போபோ)

## 99. அரட்டொன்று போட்டு

இராகம் : தன்யாசி] [ஆதி தாளம்

பல்லவி

அரட்டொன்று போட்டிந்த முரட்டு மனப்பேயனை
அடக்கிடுவாய் அப்பனே ! (அர)

அநுபல்லவி

வறட்டு வனுந்தரத்தை வளநக ரென்றிவன்
புரட்டுக் கவியெழுதிப் பொய்க்கதை புனைகின்றான் (அர)

சரணம்

கட்டிக் கரும்பிதென்றே எட்டியைத் தருகின்றான் ;
கற்றாழையைக்கட்டி முத்தமிடச் சொல்கிறான் ;
மட்டித் தடியருடன் மனைக்குள்ளே வருகிறான் ;
மலடிக்குச் சீமந்த மலர்களை முடிக்கிறான் ! (அர)

பெண்ணெனப் பொன்னெனப் பிரியத்தைக் காட்டுவான் !
பிடிபட்ட மாந்தரைப் பேயென வாட்டுவான் ;
கண்ணிலே பொடிதூவிக் கந்தர்வ லோகங்கள்
காணெனப் புலிநரிக் காட்டிலே ஓட்டுவான் (அர)

## 100. ஆருமில்லேன்

இராகம் : பந்துவராளி] [ஆதி தாளம்

பல்லவி

ஆருமில்லேன் அ-ஞ-தி—அம்மா உன்
அருளே பர கதி (ஆரு)

அநுபல்லவி

பாரறி யாத பால பரதேசி நானம்மா,
ஊரும் உறவு மில்லேன் ; பேரும் புகழும்வேண்டேன் ! (ஆரு)

சரணம்

சோறின்றேல் உன்பெயர் சொல்லிப் பசியாறுவேன் ;
சோமனின்றேல் குழந்தை யாமென மாறுவேன் ;
ஆறில்லா ஊருக்கிங் காகாசமே கதி,
அகமில்லா எனக்கிந்த சகமெல்லாம் வீதி ! (ஆரு)

எங்கெங்குன் இச்சை நான் அங்கங்கே செல்கின்றேன் ;
ஏவும் பணிபுரிய என்னை நிவேதிக்கின்றேன் ;
இங்குன் கருணையை நம்பியே வாழ்கின்றேன் ;
எவ்விடந் திரிந்தாலும் உன்னிடம் வசிக்கிறேன் ; (ஆரு)

## 101. புத்தப் புது வசந்தம்

இராகம் : காபி] [திஸ்ர ஏக தாளம்

பல்லவி

புத்தப் புது வசந்தம்—சகியே
பூத்துக் கனிந்ததடீ (புத்த)

அநுபல்லவி

சித்திரைச் சோலையிலே—கலைத்
தேனுண்டு பாடிடுவோம்—சகியே
மானுடன் ஆடிடுவோம்! (புத்த)

சரணம்

வெள்ளி மலையினின்றே—பொங்கும்
வெள்ளப் பெருக்கினைப் போல்—சகியே
உள்ளக் குகையினின்றே—பேரின்பந்
துள்ளி வருகுதடீ—அதை
அள்ளிப் பருகிடுவோம்! (புத்த)

அசையும் காற்றினிலே—அருள்மணம்
ஆடிவருகுதடீ—சகியே
திசை யெல்லாம் பொலிய—அழகுத்
தீப்ப றக்குதடீ—பாட
நாப்ப றக்குதடீ (புத்த)

ஊகத்தைத் தூண்டுதடீ—உலகில்
உண்மைப் பொருள் காணத்
தாகத்தைத் தூண்டுதடீ—தெய்வ
மோகத்தைத் தூண்டுதடீ—சக்தி
வேகத்தைத் தூண்டுதடீ (புத்த)

## 102. பரிபூரணம் அருள்வாய்

இராகம் : முகாரி] [தேசாதி தாளம்

பல்லவி

பரிபூரணம் அருள்வாய் பரனே!
பாரிலே யோக தீரனை வாழப் (பரி)

அநுபல்லவி

அரிதாகிய நரஜீவனையே
அமரஜீவனாக்கி ஆனந்தம் பெறவே (பரி)

**பரிபூரணம் அருள்வாய்**

**சரணம்**

பரமாத்மசே தனமற்ற ஜீவன்
பதராகும் ; அது பயிராகுமோ ?
சிரமான ஞான சித்த சுத்தனுகித்
தேகமும் தேகியும்
சிவபோக மெய்தும் (பரி)

## 103. பயப்படாதிரு மனமே

**இராகம் : பரசு]** **[திரிபுடை தாளம்**

**பல்லவி**

பயப்படா திரு மனமே—நல்ல
பக்தரைக் காக்கும் பரா சக்தி துணையுண்டென்றும் (பய)

**அநுபல்லவி**

அயலவர் வாழ்ந்தால்வெம் புயலெனச் சீறிடும்
ஆத்திரப் பொருமையின் நாத்திகக் கொடுமையால் (பய)

**சரணம்**

நயவஞ்ச கம்பின்னே நகைத்துப் புறம்பேசினும்,
நமன்பாச மேயெதிர்த்து நலிவுற வீசினும்,
சுயநல வகங்காரம் துயர்பல செய்தாலும்,
துஷ்டப் பகைவர் உன்மேல் சுடுசரம் பெய்தாலும்,
பதருதே-சித்தஞ் சிதருதே-அன்பை
உதருதே-விம்மிக் கதருதே.........
தயைவடி வான தேவி அபயந்தந் துணைக் காப்பாள் (பய)

## 104. சதா மௌனி

**இராகம் : மத்யமாவதி]** **[ஆதி தாளம்**

**பல்லவி**

சதாமௌனி யாயிருந்தால்
சலனமேன் மனமே ? நீ (சதா)

**அநுபல்லவி**

நிதானமாய் நினைத்து நினைத்து
நினைப்பி லாத நினைக் கலந்து (சதா)

**சரணம்**

அகங்காரங் கிளம்பி டாமல், அமைதியைக் கைவிடாமல்,
ஆசைப்புலன்கள், அறியும்அறிவை நாசஞ் செய்தி டாமல்,
சகவிவகார வம்பை யெல்லாஞ் சக்கை யென்று பக்கமொதுக்கி,
சத்திய நித்திய வத்துவைப்
புத்தியில் வைத்து ரமித்து நீ (சதா)

## 105. சுகம் எது, சொல்?

இராகம் : சங்கராபரணம்] [ஆதி தாளம்

பல்லவி

சுகம்எது சொல் மனமே? நித்திய மான
சுகம் எது சொல் மனமே? (சுகம்)

அநுபல்லவி

'சகஞ்சுகம்' என்கிற சஞ்சல மாயையோ?
'அகம், அகம்' என்றுள்ளே
ஆடிடும் வாய்மையோ? (சுகம்)

சரணம்

அலைபோல் எழுந்துவிழும் அரசியல் ஆட்சியோ?
அஹம்ப்ரம்ம சேதனம் அடைந்த சுயாட்சியோ?
நிலையில்லாப் பரத்தையின் விலையின்பம், இன்பமோ?
நின்னைப் பிரியாச் சிவ நேசமே யின்பமோ? (சுகம்)

கனதனச் சுமைகளால் மனதமை திதருமோ?
கழுதைக்குப் பொதியேந்திக் கால்வலி தீருமோ?
எனதுன தெனப்போர்செய் குணதொந்த விகாரமோ?
என்றும் அமரநிலை நின்ற சாக்ஷாத் காரமோ? (சுகம்)

## 106. பந்தம் விட்டாலே

இராகம் : ஆனந்த பைரவி] [ஆதி தாளம்

பல்லவி

பந்தம்விட்டாலே சுகமே—அதிலே சிக்கி
பாழாகாதே அகமே... (பந்தம்)

அநுபல்லவி

எந்தெந்த உறவினர் சொந்தங்கொண் டாடினாலும்
தந்திரமாயவர் தன்னலம் சாதிப்பார் (பந்தம்)

சரணம்

சாதி முறைகளைத் தங்கத்தால் அளப்பார்கள்;
சலியாது கொடுத்தாலும் ஒழியாது கேட்பார்கள்,
வேதசாஸ்திர மெல்லாம் வீதிக்குச் சொல்லுவார்;
வீட்டிலே சன்மார்க்க
விதிகளைக் கொல்லுவார் (பந்தம்)

வெள்ளி நடமாடினால் வெண்ணகை காட்டுவார் ;
வெறுங்கையைக் கண்டதும் விரைந்து கம்பிநீட்டுவார்;
கள்ளக் கும்பிடு போட்டுக் காரியம் சாதிப்பார் ;
கண்டால் காமாட்சிநாயக்கன்
கதையை ஆமோதிப்பார் (பந்தம்)

## 107. மறந்தாயோ உலகே

இராகம் : சக்ரவாகம்] [சாபு தாளம்

பல்லவி

மறந்தாயோ உலகே—பரம்பொருளை (மற)

அநுபல்லவி

பிறந்து பிறந்து சாகும் பிணவுட லுருக்களை
விழுந்து விழுந்து போற்றி வீணுக்கே ஆளாகி (மற)

சரணம்

எனதியான் என்கின்ற இறுமாப்புக் கோட்டையில்,
இந்த உலகைக் காக்க இறங்கிவந் தோம் என்றே,
தனகன வானகித் தனக்கொரு மதஞ்செய்து,
சாகோமென்றே மண்ணும் ஜகஜாலங் களைநம்பி (மற)

## 108. உறங்காதே உலகே

இராகம் : முகாரி] [ஆதி தாளம்

பல்லவி

உறங்காதே உலகே—மடமையில்
உறங்காதே உலகே ! (உற)

அநுபல்லவி

கறங்கான பொய்மனக் கவலையில் ஏங்காதே,
கறக்கும் பசுவைத்தந்து கழுதையை வாங்காதே (உற)

சரணம்

தாயுளந் துறந்துநீ பேயுளங் கொண்ட தேன் ?
சாதுஜீவர்களைச் சாகக்கொன் றுண்டதேன் ?
ஆயுளை முற்றிலும் அசைபோட்டுத் தீர்ப்பதேன் ?
அண்ணன் தம்பிகளுக்குள்
அடிதடி பார்ப்பதேன் ? (உற)

பேசிப்பேசிப் பொழுதை பெருங்கொலை செய்வதேன் ?
பேராசைப் பித்தத்தால் ஊராரை வைவதேன் ?
ஆசையா ணவங்களால் மோசமாய் நடப்பதேன் ?
அறிவைப்பொய்ப் புலன்வழி
அலைந்திட விடுப்பதேன் (உற)

பணந்தேடி யுதவாமல் பதுக்கிநீ வைப்பதேன் ?
பாப புண்ணியங்களைப் பாராது நடப்பதேன் ?
குணந்தனைப் போற்ருது குற்றமே காண்பதேன் ?
குப்பைத் தொட்டியில் வாழ்வைக்
கொட்டிவீ ணுவதேன் ? (உற)

நீதியைக் கைவிட்டுச் சாதியை மதிப்பதேன் ?
நெஞ்சி லுணர்ச்சியின்றி நீலிக்கண்ணு குப்பதேன் ?
போதகுரு மீதும் பொய்ப்பழி புனைவதேன் ?
போலித்தோ லழுகையே பொழுதெலாம் நினைவதேன் ()

அடுத்தவர் வாழ்க்கையைக் கெடுத்திடப் பாய்வதேன் ?
ஆகாச குண்டனைப் அறிவின்றி மாய்வதேன் ?
எடுத்ததெற்கெல்லாம் நாய்போல் எரிந்து விழுவதேன் ?
ஏமாற்று மாயத்தை காமுற்றுத் தொழுவதேன் (உற)

மோகக் குழியில் கண்ணை மூடிப்போய் விழுவதேன் ?
முத்தி நெறி சொன்னல் மூக்காலே அழுவதேன் ?
தாகம் பசி என்றால் தாழ்ப்பாள் இறுக்குவதேன் ?
தம்படிக் காசிற்கும் சண்டை முறுக்குவதேன் ? (உற)

போக சுகமெல்லாம் புளிப்புத்தட்டிப் போகும் ;
புதைத்த பணத்தைக் காலப் பூதங்கொண்டேபோகும்;
தேகம் விழு முன்னே தேகியைத் தேடுவாய் ;
திவ்விய நாமசங் கீர்த்தனம் பாடுவாய் ! (உற)

## 109. சன்மார்க்கம் இது

**இராகம் : பைரவி]** **[ஆதி தாளம்**

**பல்லவி**

சன்மார்க்கம் இது—ஜகத்தீரே—நல்லோர்
சாதனம் செய்திட வகுத்தாரே—சுத்த (சன்)

**அநுபல்லவி**

பன்மார்க்கத்தின் சாரம்—பக்தி பரோபகாரம்
துன்மார்க்க மில்லாத தூய சதாசாரம் (சன்)

**சரணம்**

சத்திய தருமத்தைத் தயங்காது தாங்குவீர் ;
சஞ்சலப் பேய்களைக் கொஞ்சாது நீங்குவீர் ;
நித்தியப் பொருளையே நெஞ்சில் உபாசிப்பீர் ;
நின்மலர் சங்கத்தை நிதநிதம் நேசிப்பீர் ! (சன்)

துயர்தரும் ஆசையைத் துரிதமாய் நீக்குங்கள் ;
தொந்தபந்தவினையைத் துண்டுதுண் டாக்குங்கள் ;
இயல்பென்றுந் திரியாமல் இல்லறம் பேணுங்கள் ;
இயற்கையின் ஆடலை
மயக்கறக் காணுங்கள் ! (சன்)

பேருக்கும் புகழுக்கும் பேராசை கொள்ளாதீர் ;
பேத புத்தியினாலே
சாதிகொண் டெள்ளாதீர் ;
ஊருக்கு நல்லதை உடன்செய மறவாதீர் ;
உள்ளதை இல்லையென்
றொருபோதுங் கரவாதீர்; (சன்)

ஈட்டிய பொருளினை ஈந்துண்டு வாழுவீர் ;
இருளும் வறுமையும் ஏகிடச் சூழுவீர் ;
நாட்டினி லே நல்ல ஞானவொளி வீசுவீர் ;
நயமுள்ள உண்மையைப்
பயமின்றிப் பேசுவீர் ! (சன்)

மானத்தை உயிரினு மாண்பெனக் காக்குவீர் ;
மானிடத்தைத் தெய்வ மந்திர மாக்குவீர் ;
தீனரக்ஷகனை தியானத்தாற் கூடுவீர்,
தேவஜீவனம் பெறத் திருவரு ளாடுவீர் ! (சன்)

## 110. ஒன்றே பரம்பொருள்

இராகம் : நாதநாமக்கிரியை] [ஆதி தாளம்

பல்லவி

ஒன்றே பரம் பொருளாம்—பல
உலக விளையாடல் அதனருளாம்—உண்மை (ஒன்றே)

அநுபல்லவி

நின்றொரு நிலையிலே நீளுயிர்க் குயிராக
நீக்கமறக் கலந்து போக்கு வரவு மற்ற (ஒன்றே)

சரணம்

அரனென்றும்—நா
ரணனென்றும்—குரு
பரனென்றும்—பி
ரமனென்றும்,
அல்லா யஹோவா வென்றும்,
அம்மை அப்ப னென்றும்,
எல்லாரும் தொழுதேத்த
வல்ல சுயம்ப்ரகாசம் ! (ஒன்றே)

## 111. ஊருக்குப் பாரமாய்

இராகம் : துஜாவந்தி] [ஆதி தாளம்

பல்லவி

ஊருக்குப் பாரமாய் வாழேனே—நான்
உழைத்துண்டுன் பணிசெய்யத் தாழேனே ! (ஊரு)

அநுபல்லவி

பாருயிர்த் தொகுதியாய்ப் பரவி விளையாடும்
பரமா, பொதுநல வரமே அருளுவாய் ! (ஊரு)

சரணம்

ஊனுடல் பூண்டுயிர் உள்ளநாள் வரையிலும்,
ஒவ்வொரு மூச்சையும் செவ்விய செயலாக்கி,
மோனக் கலப்பை கொண்டு ஞான வுழவு செய்தே,
முத்திப் பயிர் விளக்கும் சத்தி யெனக்கருள்வாய் !
உலகெல்லாம் நலம்பெற
ஊட்டி, வறுமை யோட்டிப்
பலனையுன் மலரடி
பக்தியாய் வைத்திடுவேன் (ஊரு)

## 112. ஐயா யாரொரு வீரஸந்யாசி

இராகம் : எதுகுலகாம்போதி] [சாபு தாளம்

பல்லவி

ஐயா யாரொரு வீரஸந்யாசி—யென்
அருட்பசி தீராயோ? முகம் பாராயோ? (ஐயா)

அநுபல்லவி

துய்யா பொன்னம்பலம் வாழ்-துரையேஉன் வாசலில்
துட்டுக்குக் கப்பறை தட்டி வரவில்லை (ஐயா)

சரணம்

அன்னக் காவடி யில்லை; ஆண்டி மடமில்லை;
அழகான மடத்தாய்க்கும் ஆசைப்படுவதில்லை;
மன்னுயிர்க் குலமெல்லாம் உன்னருட் குலமாக்க
வல்லமை வேண்டினேன்
தில்லையின் வள்ளலே! (ஐயா)

காசுபணங்களை வீசியெறிந்து வந்தேன்;
காமமெல் லாம் சிவ காமமொன்றே எந்தாய்!
மாசற்ற நின்பொது மன்றினில் ஒன்றியே,
மன்பதை வாழ்ந்திடும்
அன்பதை நல்குவாய்! (ஐயா)

## 113. ஓரிடம் தாராயோ?

இராகம் : வீரவஸந்தம்] [ஆதி தாளம்

பல்லவி

ஓரிடம் தாராயோ?—பரமா (ஓரிடம்)

அநுபல்லவி

போரிடுங் கோள்பொய் பொருமைத் தொல்லையின்றி
புண்ணியர் போற்றிடும்
பொன்னொன தில்லைமன்றில் (ஓரிடம்)

சரணம்

தன்னலப் புலிகளும், தந்திர நரிகளும்,
பொன்னடி யார்களும் பொழுதை வீணாக்காமல்,
உன்னடி யாருடன் உனக்கே நான் ஆளாகி,
உன்புகழே பாடி அன்புசெய் தின்புறவே (ஓரிடம்)

## 114. ஞாலமெல்லாம் உனது

இராகம்: தேவகாந்தாரி] [திரிபுடை தாளம்

பல்லவி

ஞாலமெல் லாமுனது நாமரூபவிகார
நாடக மாகக் கண்டேனே—இறைவா (ஞால)

அநுபல்லவி

காலத் திரைகள் கட்டிக்—கர்மகுண தொந்தக்
கதைகளை நவரஸஞ் சிதைவற நடித்திடும் (ஞால)

சரணம்

அன்புளக் காதலால் இன்பமயக் காட்சிகள்
ஆயிரம் காட்டுகின்ருய்...
பின்பு கவலைகளால் துன்பக் கண்ணீரையே
பெருக்கியேன் வாட்டுகின்ருய்?
நண்பர் பகைவரென்றே, புண்படும் போர்வினை
நாளுநீ மூட்டுகின்ருய்;
கண்பார்த் திருக்கையிலே திண்ணெனச் சாவெனும்

பறைகொட்டித்
திரையிட்டுத்
தரைவிட்டு
மறைக்கின்ருய் (ஞால)

## 115. தியாகம் கீதா சாரமே

இராகம்: பிலஹரி] [சாபு தாளம்

பல்லவி

தியாகம் கீதா சாரமே—கர்மபல
தியாகம் கீதா சாரமே (தியாகம்)

அநுபல்லவி

சோகமோக பந்த தொந்தங்களை விடுத்து
வேகங்களை யடக்கி யோகயுக்தனாய் வாழும் (தியாகம்)

சரணம்

இதய பரமாத்மனை எப்போதுமே யெண்ணி
இயற்றுந் தொழிலை யவன்
இனிய பூஜையாய்ப் பண்ணி
உதயகல்யாணி போலே உள்ளுப சாந்தமாய்
உத்தம பக்தஜீவன்
முக்தனாய் வாழ்ந்திடும் (தியாகம்)

## 116. சுகவழிதனை யறி மனமே

இராகம் : காபி] [ஆதி தாளம்

பல்லவி

சுகவழி தனையறி மனமே—அதைத்
தொடர்ந்துநில் அனு தினமே (சுக)

அநுபல்லவி

தகவழி யாதுசு தர்மத்தைப் பேணுய்,
சமரஸ சன்மார்க்க சாதனம் பூணுய் (சுக)

சரணம்

கல்வியைத் தினந்தினங் கருத்துடன் வளர்த்திடு ;
கற்றவழி நடந்து சொற்றவ ருதிரு ;
செல்வக்கைத் தொழில்களைச் சேமமாய்ப் பயின்றிடு;
தேச நலத்திற்கோர் சேவையை முயன்றிடு! (சுக)

உடலினை வெறுக்காதே ; உலகினை வெறுக்காதே ;
உற்றவ ருக்கியன்ற உதவியை மறுக்காதே ;
கடவுளை மறக்காதே ; கடமையைத் துறக்காதே ;
காற்றையுங் கதிரையும்
போற்றிடச் சோம்பாதே (சுக)

புண்ணியச் செயல்களைப் பண்ணப்பின் வாங்காதே ;
புல்லரின் கொடுமையைப் போக்காது தூங்காதே ;
திண்ணிய தீரனுய்த் தியாகபுத் தியுடனே
செய்வன செய்திடின்
செயமுனைத் தாங்குமே (சுக)

புலன்களை யடக்கிநீ பொதுவழி நின்றிடு ;
பூரண யோகியாய்ப் புவியினை வென்றிடு ;
பலன்களிற் பற்றின்றிப் பணிகளைப் புரிந்திடு ;
பார்வை யுள்ளாக்கியே பரமனை நினைத்திடு ; (சுக)

## 117. சித்தாந்தம் இதுவே

இராகம் : பைரவி] [திரிபுடை தாளம்

பல்லவி

சித்தாந்தம் இதுவே—உலகமெல்லாம்
சிவமய மென்பதுவே (சித்)

அநுபல்லவி

அத்தன் என் ஆண்டவன்—ஆனந்த நடராஜன்
அடியார்கள் அன்பினல் அனுபவித் தோதிய (சித்)

சரணம்

கரும்பிலும் கனியிலும் நிரம்பிய ரசம்போலே,
கண்களுக் கொளி காட்டும் விண்மணிச் சுடர்போலே,
அரும்பினுள் மணம் போலே, விரும்பும் உயிர்க்குயிராய்
அங்கங்கே அதுதுவாய்த் தங்கி யருள்புரியும்,
மங்கள ஜோதியிற்
பொங்கிய ஞானமாம் (சித்)

## 118. கருணாகரனை குருநாதன்

இராகம் : பூபாளம்] [சாபு தாளம்

பல்லவி

கருணாகர னை குருநாதன் வருகின்றான் ;
கண்விழித் தெழுந்திரு மனமே! (கருணா)

அநுபல்லவி

அருணோதை யம்போலே கிரண ஜோதி யழகன்,
அன்பருக் கினிதாகும் அருளுத யந்தரக் (கருணா)

சரணம்

சித்தந் தெளிந்திடச் செகவிருள் அழிந்திட,
சீவ மலரிலே சிவமணந் தழைத்திட,
சுத்தா னந்த ஞானச் சுகநிலை யளித்திட,
ஜோதி சுதந்தர போத முணர்ந்திடக் (கருணா)

சாதிமதநிறச் சண்டைகள் ஒழிந்திடச்
சமரஸ சாதனம் அமரநிலை தர,
ஆதி பரா சக்தி அருளுடை நாயகன்
ஆண்டவன்—ஐந்தொழில்
பூண்டவன்—ஆனந்தத்
தாண்டவன்—உலகுய்ய
வேண்டியே யித்தினம் (கருணா)

## 119. அன்புவரம் தருவாய்

இராகம் : பேகடா] [ஆதி தாளம்

பல்லவி

அன்புவரந் தருவாய்—என்னப்பனே
ஆனந்த சத் குருவே! (அன்பு)

அநுபல்லவி

உன்பாதம் பற்றிநான்
உலகிற்கு நலஞ்செய்யும் (அன்பு)

சரணம்

அன்னிய மின்றிநான் உன்னுடன் ஒன்றாகி
மன்னுயிர்க் கின்னுயிர் மன்னநீ யென்றுணர் (அன்பு)

எல்லாம் சிவனருள், எல்லாம் சிவன் செயல்,
எல்லாம் சிவமயம் என்று தொண்டுசெய்யும் (அன்பு)

## 120. சஞ்சலந் தீர்த்திடுவாய்

இராகம் : தனஸரி] [ஆதி தாளம்

பல்லவி

சஞ்சலந் தீர்த்திடுவாய்—சிவனே
சஞ்சலந் தீர்த்திடுவாய் (சஞ்)

அநுபல்லவி

நெஞ்சிலே சுத்தாத்ம நெருப்பினை ஊக்கி
வஞ்சகப் புலன்களின் மாயத்தை நீறாக்கிச் (சஞ்)

சரணம்

எனக் கவலை வழி மானங்கெட் டலைந்திடும்,
எதிர்வரும் பொருளின்மேற் கதுமெனப் பாய்ந்திடும்
நானெனக் கிளம்பியே ஞானத்தை மறைத்திடும்
நச்சு மனதை உன திச்சையி லடக்கியே (சஞ்)
சத்திய வாக்குடன் சாதுக்கள் ஆதரவும்
சமரச நிலைபெறும் சன்மார்க்க சாதனமும்
சுத்த பரம யோக சித்தியும் அத்யாத்ம
சுதந்தர வாழ்க்கையும் இதமுட னுதவியே (சஞ்)

## 121. வைராக்கியம் தருவாய்

இராகம் : சுருட்டி] [ஆதி தாளம்

பல்லவி

வைராக்கியம் தருவாய்—சித்த
வைராக்கியம் தருவாய் (வைரா)

அநுபல்லவி

தைரிய மாகமன வைரியை வென்றுளும் (வைரா)

சரணம்

சாட்சி நிலையினிலும், காட்சி நிலையினிலும்,
சகவிளை யாடலின் சூட்சி நிலையினிலும்,
ஆட்சிசெய் தனைத்தையும் ஐந்தொழில் நடத்திடும்
அப்பனே நீயெனுட் செப்பிய படி செய்ய (வைரா)

நானெனும் ஆணவம் நாணி வணங்கிட,
நாளு விகாரமாதி தானுனக் கிணங்கிட,
ஏனென்றும் எதுவென்றும் எங்கென்றும் இல்லாமல்,
இருந்தபடி யிருந்து
பொருந்தியுன்னுடன் வாழும் (வைரா)

வஞ்சக் கவலை விட்டுத் தஞ்சம் புகுந்துமனம்
வாக்கிலுஞ் செயலிலும் வைத்துன்னை நேசித்து,
நெஞ்சக் கிளியெப்போதும் அஞ்செழுத் தோதியே,
நிம்மதி யாகிய நித்தியா னந்தம் பெற (வைரா)

## 122. உன்னைத் தெளிந்திடுவாய்

இராகம் : நவரோஜ்] [ஆதி தாளம்

பல்லவி

உன்னைத் தெளிந்திடுவாய்—உளமே (உன்னை)

அநுபல்லவி

உன்னைச் சிவசத்தென்றே உள்ளபடி அறிந்தால்,
இன்னலில்லை என்றும் இன்பமின்ப மின்பமே! (உன்னை)

சரணம்

சிந்தை யலையாமல் தியானத்தில் கூட்டுவாய்;
தினந்தினம் மனத்திற்குச் சிவபக்தி ஊட்டுவாய்:
வந்ததும் போனதும் வருந்தி நினையாதே;
வாகா யிருந்தபடி
ஸோஹம் பாவனை செய்தால் (உன்னை)

## 123. அலையாதே பேய் நெஞ்சமே

இராகம் : பியாகடை] [சாபு தாளம்

பல்லவி

அலையாதே பேய் நெஞ்சமே—ஆடிமேகம்போல்
கலையாதே மட நெஞ்சமே ! (அலை)

அநுபல்லவி

உலகெல்லாந் திரிந்தாலும் உண்மை விளங்காது,
கலையெல்லாங் கற்றாலும் கருத்துத் தெளியாது ! (அலை)

சரணம்

பலபல வகையாகப் பரந்த பாரக மெல்லாம்
பஞ்ச பூதவிகாரம் ; பார்த்ததை மயங்காதே ;
மலைபோலே உன்னுள்ளே நிலைபெறத் தயங்காதே !
மாயமயக்குகளில் பாய்ந்து முயங்கிடநீ (அலை)

## 124. நிலையம் ஒன்று

இராகம் : காபி] [ஆதி தாளம்

பல்லவி

நிலையமொன் றெனக் கருள்வாய்—யோக
நிஷ்டையி லூன்றியே நின்னருட் பணி செய்ய (நிலை)

அநுபல்லவி

மலைநதி வளஞ்செயு மலர்கனிச் சோலையில்
மான்பசு புள்ளினம் வாழ்பசுங் கோயிலில் (நிலை)

சரணம்

பலசாதி மதங்களின் கலகமில் லாமலே
பரிசுத்த சன்மார்க்க பக்தருடனே கூடி,
கலைகளுந் தொழில்களும் பலன்பெற வளர்த்தொரு
கவலையு மின்றிநான் கடவுளறத்தைக் காக்க (நிலை)

வறுமை மடமை யச்சம் வஞ்சம் பொறாமையின்றி,
வாய்மையுந் தூய்மையும், தாய்மன நேயமும்,
நிறைதவ ஒழுக்கமும், இறையருட் சோதியும்,
நிலவிடும் பூரண நின்மலர்க் காகிய (நிலை)

பூவுயிர்த் தொகுதியே புனிதமெய்க் கடவுளாய்ப்
புண்ணியத் தொண்டுகள் பூசனையாகவே,
தேவஜீவனம் பெற்ற திவ்விய தீரர்கள்,
செகத்தினில் சத்திய யுகத்தினை வளர்த்திடும் (நிலை)

## 125. ஜீவன் முக்தி

**இராகம் : காம்போதி]** **[ஆதி தாளம்**

**பல்லவி**

ஜீவன் முக்தி யிதே—மனமே
ஜீவன் முக்தி யிதே (ஜீவ)

**அநுபல்லவி**

ஜீவஜக பரமாம், பாவனு தீதமாம்,
சின்மய வஸ்துவே நின்மய மாயிரு (ஜீவ)

**சரணம்**

ஊனி லுயிர்த்திடும் ஞானசொரூபமாம்;
உலகெல்லாம் பலவென நிலவிடும் ஒன்றதாம்;
ஆனந் தாம்ருதம் ஆனசுத் தாத்மாவாம்;
அழிவறு மதனிலே அறிவா யிருப்பதே! ... (ஜீவ)

முன்னிலைப் பொருள்களின் மோகமெல்லாம் போக
மும்மல பந்தமின்றி நின்மல மாகியே,
தன்னிலை தானுகத் தாக்கற் றிருந்தென்றும்
சஞ்சல மில்லாத சகச நிலைபெற்றுல் ... (ஜீவ)

தாகசோகங்களைத் தவிர்த்த நிலையிலே,
சச்சி தானந்தபர சாந்த மலையிலே,
ஏகத்திலே சுத்த போகத்திலே—பூர்ண
யோகத்திலே ஹம்ஸ ஸோஹத்திலே வளர் ... (ஜீவ)

## 126. பரமானந்தம் பெருகி

**இராகம் : ஸிந்து நாமக்ரியை]** **[தேசாதி தாளம்**

**பல்லவி**

பரமானந்தம் பெருகிப் பல்லாண்டு
பாரால யத்தில் சீரோங்கி வாழ்க! (பரமா)

**அநுபல்லவி**

பரிபூர்ண யோக போக வைபவத்தால்
பக்தகோடி யெல்லாம் சுத்தசித்தி பெற்றே (பரமா)

**சரணம்**

தருமார்த்த காமந் தாங்கும் இல்லறமும்,
தவசக்தி தரும் சஹஜ முக்தியும்,
கருமவாழ் வனைத்தும், பிரம யக்ஞமாகக்
காணுந் தெய்வநிலை
பூணும் ஆணும் பெண்ணும் (பரமா)

**முற்றிற்று**

# தேவ கானம்

## இராக அட்டவணை


| இராகம் | பாட்டு எண் |
|---|---|
| அசாவேரி | 50 |
| அடாணா | 22,92,96 |
| ஆகிரி | 67 |
| ஆரபி | 45 |
| ஆனந்த பைரவி | 70,85,106 |
| இந்துஸ்தான் தோடி | 82 |
| இராகமாலிகை | 2,66,93 |
| உசேனி | 7 |
| எதுகுல காம்போதி | 112 |
| கண்டா | 53 |
| கமாஸ் | 54 |
| கரஹரப்ரியா | 77 |
| கல்யாணி | 11,16,59,90 |
| காபி | 10,48,101,116,124 |
| காம்போதி | 1,12,78,125 |
| கானடா | 8,74 |
| குந்தலவராளி | 76 |
| கேதாரகௌளம் | 3 |
| கேதாரம் | 4,6,57 |
| கௌளிபந்து | 37 |
| சக்ரவாகம் | 107 |
| சங்கராபரணம் | 61,64,105 |
| சரஸ்வதிமனோஹரி | 20 |
| சஹானா | 32,40,42 |
| சாமா | 47 |
| சாயாதரங்கிணி | 52 |

| இராகம் | பாட்டு எண் |
|---|---|
| சிந்துநாமக்ரியை | 126 |
| சித்தரஞ்சனி | 41 |
| சிம்மேந்திரமத்திமம் | 43 |
| சுத்தபங்காளா | 60 |
| சுபபந்துவராளி | 79 |
| சுபோஷணி | 28 |
| சுருட்டி | 71,121 |
| சூலினி | 62 |
| செஞ்சுருட்டி | 26,49,75 |
| தனாஸ்ரீ | 120 |
| தன்யாசி | 30,89,99 |
| துஜாவந்தி | 111 |
| தேவகாந்தாரி | 80,114 |
| தேவமனோஹரி | 83 |
| தேனுக | 95 |
| தோடி | 9,33 |
| நடபைரவி | 19 |
| நவரோஜ் | 122 |
| நாட்டை | 36 |
| நாட்டைக் குறிஞ்சி | 21 |
| நாதநாமக்கிரியை | 5,29,58,110 |
| நாராயணகௌளை | 72 |
| நீலாம்பரி | 38 |
| பந்துவராளி | 86,100 |
| பரசு | 91,103 |
| பலஹம்ஸ | 25 |

## இராக அட்டவணை

| இராகம் | பாட்டு எண் | இராகம் | பாட்டு எண் |
|---|---|---|---|
| பியாகடை | 98,123 | ரவிசந்திரிகா | 56 |
| பியாகு | 14,87 | ரீதிகௌளை | 17 |
| பிலஹரி | 13,115 | வசந்தம் | 69 |
| பூபாளம் | 118 | வசந்தா | 18 |
| பூர்ணஷட்ஜமம் | 27 | வராளி | 84 |
| பூர்வகல்யாணி | 88 | வீரவசந்தம் | 113 |
| பேகட | 119 | ஹம்ஸத்வனி | 24 |
| பைரவி | 65,81,94,109,117 | ஹரிகாம்போதி | 23 |
| மத்யமாவதி | 34,44,73,104 | ஹனுமதோடி | 51 |
| மயூரத்வனி | 15 | ஸ்ரீராகம் | 31,39 |
| முகாரி | 35,46,63,102,108 | ஸ்ரீரஞ்சனி | 97 |
| மோகனம் | 68 | ஜயநாராயணி | 55 |

# தேவ கானம்

## பாட்டு முதற்குறிப்பு அட்டவணை


| பாட்டு | பக்கம் |
|---|---|
| அடைக்கலம் புகு மனமே | 35 |
| அது நீ என்றறிவாய் | 39 |
| அத்தா அருளில்லையோ? | 23 |
| அந்தரங்கமெல்லாம் | 22 |
| அமரானந்த வாரியே | 21 |
| அம்மா உன்னையே | 48 |
| அம்மா பரதேவி | 45 |
| அரட்டொன்று | 56 |
| அருணோதயம் வருமோ | 26 |
| அருள் புரிவாய் | 15 |
| அலையாதே பேய் | 70 |
| அல்லும் பகலும் | 32 |
| அன்புச் சிகாமணியே | 8 |
| அன்பு வரம் தருவாய் | 68 |
| அன்னை அன்னை அமுதம் | 46 |
| ஆசையைத் தீர்ப்பாய் | 31 |
| ஆண்டவா உனதடி | 4 |
| ஆருமில்லேன் | 56 |
| ஆரோ வந்தென்னை | 33 |
| இதய குகை நடுவில் | 41 |
| இவளாரோ சகியே | 34 |
| ஈசனே சக்தி விலாச | 15 |
| உறங்காதே உலகே | 60 |
| உன் பாத காணிக்கையே | 9 |
| உன்னைத் தெளிந்திடுவாய் | 69 |
| ஊருக்குப் பாரமாய் | 63 |
| எண்சாண் உடம்பு | 29 |
| எப்படிக் கூடுவேன் | 30 |
| எப்படிப் பாடினரோ | 18 |
| எப்படி யானறிவேன் | 28 |
| எல்லாம் சிவமயம் | 14 |
| எல்லாம் நீயே அம்மா | 49 |
| எல்லார்க்கும் பொதுவான | 9 |
| எழுந்திரு நிஜமனிதா | 50 |
| எனக்கென்ன மனக்கவலை | 49 |
| என் முகம் பாரையனே | 27 |
| என்னைக் கைவிடுவாயோ | 25 |
| ஏதுக்குக் கவலை | 7 |
| ஏனோ தாமதித்தாய் | 24 |
| ஏன் பிறந்தாய் | 53 |
| ஐயா யாரொரு | 64 |
| ஒருவா என் இறைவா | 13 |
| ஒன்றே பரம்பொருள் | 63 |
| ஓங்கார சத்யஜோதி | 10 |
| ஓம் சச்சிதானந்தமே | 10 |
| ஓம் சிவஷண்முகா ஓம் | 36 |
| ஓரிடம் தாராயோ | 64 |
| கடைத்தேற வேண்டும் | 28 |
| கண்ணாரக் காண்பது | 30 |
| கண்டவர் மறவாரே | 38 |
| கயிலாசசிவ | 17 |
| கருணாகரனை குருநாதன் | 67 |
| கல்லோ உனது நெஞ்சம் | 24 |
| கவலை நீங்க | 29 |
| கனவிலாகிலும் வந்து | 22 |
| காத்திருக்கின்றேன் | 27 |
| காலடித்துகள் | 26 |
| காலனை உதைத்தவனே | 20 |
| காவாய் ஜகதீசனே | 21 |
| குடியிருப்பாய் மனமே | 50 |
| குருநாதன் அவனே | 40 |
| கைவிடாதே துரையே | 35 |

## பாட்டு முதற்குறிப்பு அட்டவணை


| பாட்டு | பக்கம் |
|---|---|
| சகஜநிஷ்டையிலே | 55 |
| சக்திக்கனல் | 44 |
| சங்கீதாஞ்சலி | 33 |
| சச்சிதானந்த | 19 |
| சஞ்சலம் தீர்த்திடுவாய் | 68 |
| சதாமௌனி | 58 |
| சன்மார்க்கம் இது | 61 |
| சித்த மிரங்கி | 11 |
| சித்தாந்தம் இதுவே | 66 |
| சிரஞ்சீவியா யிருப்போம் | 14 |
| சிவ சிவ என நினை | 12 |
| சிற்றம்பலத் துரையை | 43 |
| சுகம் எது சொல் | 59 |
| சுக வழிதனை | 66 |
| சுத்தசக்தி ஜய | 46 |
| சூட்சுமம் சொல்லையனே | 6 |
| ஞாலமெல்லாம் உனது | 65 |
| தஞ்சம் தஞ்சம் | 32 |
| தாகந் தணித்தருள்வாய் | 20 |
| தியாகம் கீதாசாரமே | 65 |
| தீன தயாபரனே | 6 |
| தெள்ளத் தெளிந்திடு | 54 |
| நஞ்சையுண்ட கண்டனே | 16 |
| நாராயணி சரணம் | 47 |
| நிர்விஷயனாய் | 19 |
| நிலையம் ஒன்று | 70 |
| நில்லாதே போ | 7 |
| நீயின்றி யார் | 51 |
| பக்த ரக்ஷணி | 48 |
| பக்தி பரவசத்தால் | 11 |
| ப[illegible]யைத் [illegible]தி | 13 |
| [illegible]ந்தம் விட்[illegible] | 59 |
| பயப்படாதிரு மனமே | 58 |
| பரமானந்தம் பெருகி | 71 |
| பரிபக்குவம் தருவாய் | 23 |
| பரிபூரணம் அருள்வாய் | 57 |
| பல்லாண்டு | 43 |
| பழநியப்பன் துணையே | 38 |
| பாதமே துணை | 8 |
| பாலகோபாலனே | 39 |
| பித்துப் பிடித்தது | 51 |
| பிறப்பிலே என்னுள் | 4 |
| புண்ணியர் நாடே | 42 |
| புத்தப் புது வசந்தம் | 57 |
| புன்னகைப்பது நீயோ | 12 |
| பூரண யோக மஹேஸ்வரி | 45 |
| போபோ ஜகன் | 55 |
| மங்கள நாம சங்கீர்த்தனம் | 18 |
| மயங்காதே மனமே | 47 |
| மறந்தாயோ | 60 |
| மறவாமல் இரு மனமே | 34 |
| மன்னித்து மறந்திடுவாய் | 25 |
| மானஸ சிவ பூஜை | 5 |
| மானிட வாழ்க்கை | 16 |
| முருகனை நினை மனமே | 37 |
| முருகன் என்றதுமே | 36 |
| வாது செய்வதேன் | 54 |
| வைராக்கியம் | 69 |
| ஹரா ஹரா சம்போ | 31 |
| ஹர ஹர சிவ | 17 |
| ஸ்ரீராம் ஜயராம் | 40 |
| ஜீவ முரளியிலே | 5 |
| ஜீவன் முக்தி | 71 |
| ஜோதிஞான | 42 |


THE MADURA

ஓம்
சுத்த சக்தி

அன்பு நிலயம்

COMMERCIAL PRINTING & PUBLISHING HOUSE, G. T., MADRAS.